விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka







# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 04 வியாழக்கிழமை (20.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

நல்லூர் கந்தன் ஆலய தேர்த் திருவிழாவான நேற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் தேரில் எழுந்தருளி வருவதையும் பக்தர்கள் சூழ தேர்வலம் வருவதையும் பச்சை சாத்தப்பட்டு தீபம் காட்டப்படுவதையும் படங்களில் காணலாம்.

# அகதி முகாம்களிலுள்ள மக்களை வாழவைக்க நடவடிக்கை தேவை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

அகதி முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள மக்கள் வெள்ளப் பெருக்கினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். முகாம்களிலுள்ள மக்களை வதைக்காது அவர்களை நிம்மதியாக வாழவைப்பதற்கு அரசாங்கமும் இந்தியா உட்பட சர்வதேசமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் நேற்று கோரிக்கை விடுத்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

# ரஜனி, வைகோ மற்றும் ராம்தாஸ் புலிகளிடமிருந்து பணம் பெற்றுள்ளனர்

## அமைச்சர் பதியுதீன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழகத்தின் உச்ச நட்சத்திரமாகப் போற்றப்படும் ரஜனிகாந்த், அரசியல்வாதிகளான வைகோ மற்றும் ராம்தாஸ் ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியுதீன் (14ஆம் பக்கம் பார்க்க)

# பாற்சோறு உண்ட தெற்கு மக்கள் அரசுக்கு எதிராக போராடுவர்!

## புதிய இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

எந்த தென்னிலங்கை மக்களுக்கு பாற்சோறு கொடுக்கப்பட்டதோ, அதே தென்னிலங்கை மக்கள் வன்னி மக்கள்படும் அவலத்தை கண்டு, இந்த அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் அளவிற்கு தமது போராட்டம் முன்னெடுக்கப்படும் என காணாமல் போனோரை கண்டுபிடிக்கும் குழுவின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜனகன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் தமிழ்மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஒரு பழிவாங்கும் நடவடிக்கை என புதிய இடது சாரி முன்னணி நேற்று அதன் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ண தலைமையில் செய்தியாளர் (14ஆம் பக்கம் பார்க்க)

# 5 தாலிக் கொடிகள், 7 சங்கிலிகள் நல்லூரில் நேற்றுக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழாவில் நேற்று பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையின் உற்சவகாலப் பணிமனையில் முறையிடப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தனின் தேர்த் திருவிழாவில் பல்லாயிரக் (14ஆம் பக்கம் பார்க்க)

# பத்மநாதன் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படலாம்?

## இந்திய இணையத்தளம் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சர்வதேச பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதனை, இந்தியாவிற்கு நாடு கடத்துவது தொடர்பான கோரிக்கை விடுக்கப்படலாம் என்று இந்திய இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

1991ஆம் (14ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவில் பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாவான நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

காலை 6.15 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முருகப்பெருமான் வள்ளி–தெய்வானை சமேதராய் உள்வீதி வலம் வந்து காலை 7.15 மணியளவில் தேரில் ஆரோகணித்தார்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சூழ பேரிகை மேளங்கள், நாதஸ்வரங்கள், கண்டாமணி ஓசை ஒலிக்க, பக்தர்களின் அரோகரா என்ற ஒலியுடன் முருகப்பெருமான் தேரில் வலம்வந்தார்.

அங்கப்பிர (14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

✹ பிரபல ஆசிரியர் தயாரித்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்.

✹ தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆவணி மாத ராசி பலன்கள்.

# குமரன் பத்மநாதனுக்கு எதிராக 600 பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள்


(கொழும்பு)


மலேசியாவில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் பத்மநாதனுக்கு எதிராக 600 பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக இணையதளச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த நாட்டில் பயங்கரவாதி ஒருவருக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுவதாகவும் குமரன் பத்மநாதனிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அரசினை மேற்கோள்காட்டி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு (14ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் தேர்த் திருவிழாக் காட்சிகளை படங்களில் காணலாம்





(படங்கள்-அரவிந்த், சுதாகர்)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் கழகங்களுக்கிடையில் நடத்துகின்ற (ஆண்/பெண்) சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கழகங்கள் தமது விண்ணப்பத்தினை எதிர் வரும் முதலாம் திகதிக்கு முன்னர் இல. 70/6, கே.கே. எஸ்., வீதி யாழ்ப்பாணம் அல்லது 56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

அணி ஒழுங்கு செப்ரெம்பர் 4 திகதி கூடைப்பந்தாட்டச்சங்கத்தின் காரியாலயத்தில் காலை 8 மணிக்கு நடைபெறும் என யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## வடக்கில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு அமெரிக்கா ஆறு மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு ஐக்கிய அமெரிக்கா ஆறு மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவதாக அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகத் தத்தமது வீடுகளுக்குத் திரும்புவதற்கு உதவும் விதத்தில், இலங்கையின் வட மாகாணத்தில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்காக, ஐக் கிய அமெரிக்க அரசாங்கம் இந்நிதியை வழங்குகின்றது.

ஐக்கிய அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தின், ஆயுத அகற்றலும் தணித்தலும் பற்றிய அரசியல், இராணுவ விவகார அலு வல் பணியகத்தினூடாக வழங்கப்படும் இந் நிதி, தற்பொழுது இலங்கையில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நான்கு அமைப்புகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

அரச சார்பற்ற அமைப்புகள் கண்ணி வெடிகளை அகற்றுதல் தொடர்பான தமது ஆற்றலை அதிகரிப்பதற்கும், அடுத்துவரும் பன்னிரண்டு மாதங்களில் தமது பணியை விஸ்தரிப்பதற்கும் இம்மேலதிக நிதி இடமளிக்கும் என தூதரக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய நிலங்களை பற்றிய மதிப்பீடு கள், கண்ணி வெடிக்களங்கள் பற்றிய தொழில் நுட்பரீதியான அளவாய்வுகள், கண்ணி வெடிகளை அகற்றுதல், வெடிக்காத படைக் கலங்களை அழித்தல் என்பன கண்ணி வெடி அகற்றும் செயன்முறையில் இடம்பெறு கின்றது.

வட இலங்கையில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு இந்நிதியை அளிப்பது பற்றி ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் மகிழ்ச்சியடைகின்றது என்று பிரதித் தூதுவர் ஜேம்ஸ் ஆர். மூர் கூறினார்.

மக்கள் தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய செயன்முறையில், கண்ணி வெடி அகற்றுதல் ஒரு முக்கிய படியாகும். இடம் பெயர்ந்த அனைவரையும் விரைவா கவும் பாதுகாப்பாகவும் அவரவர் களது இல்லங்களுக்கு அனுப்புவது பற்றி இலங்கை அரசாங்கத்தின் அக்கறையை நாம் ஆதரிக்கின்றோம் என்று அவர் கூறினார்.

அவசர உணவு உதவியாக வழங்கப்பட்ட 42 மில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்க டொலர்கள், உணவு தவிர்ந்த நிவாரணமாக வழங்கப்பட்ட பதினொரு மில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்க டொலர்கள் என்பன உட்பட 2008 ஆம் ஆண்டிலும் 2009 ஆம் ஆண்டிலும் மனிதாபிமான உதவியாக 68 மில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்க டொலர் களை ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இவ்வுதவியின் பெரும்பகுதி, மோதல்களினால் வடக்கில் இடம் பெயர்ந்த இலங்கை மக்களுக்கு உதவுவற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தண்ணீரால் ஏற்படும் தொற்று நோய்கள் செட்டிக்குளம் முகாம்களில் பரவுகிறது

(வவுனியா)

தண்ணீரால் பரவும் தொற்று நோய்கள் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களில் பெருமளவிற்குப் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. சுகாதார அமைச்சின் தக வல் ஒன்றின்படி நாளாந்தம் 251 பேர் இவ்வாறான நோயால் பாதிக்கப் பட்டிருப்பது பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தத் தொற்று நோய் செட்டிக்குளம் பகுதியில் உள்ள அகதிகள் முகாமில் பெருமள விற்குப் பரவியிருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் ஜுன் மாதத்துக்கான அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. நீரால் ஏற்படும் இந்த வயிற்றோட்டம் நாளாந்தம் 251 பேருக்கு சராசரியாகப் பரவியிருப்பது ஜுன் மாதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 20 முகாம்களில் 85 ஆயிரத்து 768 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 64 ஆயிரத்து 822 பேர் உள்ளதாக அதிகாரபூர்வ மதிப்பீடுகள் தெரிவிக்கின்றது.

இதில் 13 முகாம்கள் செட்டிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த முகாம்களிலேயே இந்த வயிற்றோட்டம் பெருமளவுக்குப் பரவியிருப்பதாகவும் சுகாதார அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. செட்டிக்குளத்தில் உள்ள ஆறு வலயங்களில் அமைக்கப்பட்டிருக்கும் முகாம்களில் செட்டிக்குளம் சுகாதார இணைப்பு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 420 பேருக்கு இந்த நோய் பரவியிருப்பது தெரிய வந்தது. இருந்த போதிலும் ஜுன் மாத இறுதியில் இந்த நோய், முகாம்களில் பெருமளவிற்கு குறைந்திருப்பதும் தெரியவந்திருக்கின்றது.

இதனைவிட சீதபேதி உட்பட வேறு பல தொற்று நோய்களும் முகாம்களுக்குள் பெருமளவுக்குப் பரவியிருப்பதும் தெரியவந்திருக்கின்றது. குறிப்பாக ஜுலை மாதத்தின் மூன்றாவது வாரத்தில் 120 பேருக்கு அம்மை நோய் பரவியிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. (ச-5)

## மூலிகை மருத்துவக் கண்காட்சி மேலும் இரு நாட்களுக்கு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் வெள்ளிவிழா நிகழ்வை முன்னிட்டு யாழ். மாநகரசபையில் உள்ள சித்த வைத்தியசாலையில் நடைபெற்றுவரும் மூலிகை மருத்துவக் கண்காட்சி மேலும் இரு நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியை இதுவரை இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் பார்த்து பயன்பெற்றுள்ளனர். இக்கண்காட்சியில் மூலிகைகளும் அவற்றிற்கான விளக்கங்களும், இலவச மருத் துவ ஆலோசனைகளும், சித்த மருத்துவம் சார்ந்த நூல்களின் விற்பனையும், நரம்பு களை பலம் பெறச் செய்யும் இலேகியங்களும், வலி நிவாரணிகளும், மாணவர்களின் ஞாபகசக்தியைப் பெருக்கும் வல்லாரைச் சூரணமும், நீரிழிவு நோயாளர்களுக்கான விஷேட மருத்துவ உணவுகளின் விற்பனையும் குறைந்த விலையில் இடம்பெறுகின்றது. (ச)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com

**Learn French the French Way**
**French Classes**

இலங்கையிலுள்ள **French Embassy** மூலமும், France இல் உள்ள **Alliance Francaise de Paris** இன் ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

மாணவர்கள் , உயர்கல்வி கற்போர், அலுவலர்கள் , ஆசிரியர்கள் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

புதிய பிரிவுகள் : **சனி , ஞாயிறுகளில்.**

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

கட்டண, மேலதிக விபரங்கள்: நேரில் /தொலைபேசியினூடாக பெறலாம். (3276)

**விற்பனைக்கு**

இந்துசமய விரதங்களும் நவக்கிரக வழிபாடும் விற்பனையாகிறது. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் **சோதிடவிலாச புத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம்** விலை ரூபாய் 170/= மட்டுமே. (C-3086)

# இன்று ஒரு தகவல்

## நேர்மை

அபுஹனிபா என்ற இஸ்லாமிய பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு நெசவாளர். மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தார்.

தினமும் தானே தன் கையால் நூல் நூற்று நெசவு செய்வார். துணிகளைத் தயார் செய்வார். அவற்றையெல்லாம் தோளில் போட்டுக் கொண்டு தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்வார்.

அதனால் கிடைக்கக் கூடிய சொற்ப வருமானத்தைக் கொண்டு எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்.

அவர் ஒருநாள் பாலைவனப் பகுதி வழியாகத் தமது இரண்டு நண்பர்களுடன் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒருவன் பேரீச்சம்பழம் விற்றுக் கொண்டிருந்தான். "விலை என்ன?" என்று விசாரித்தார் அபுஹானிபா.

"ஒரு காசுக்குப் பத்துப்பழம்" என்றான் அவன்.

"சரி! ஒரு காசுக்குப் பழம் கொடு.. அதை அப்படியே ஒரு சருகில் வைத்துக் கட்டிக் கொடு. வழியில் சாப்பிட்டுக் கொள்கிறோம்" என்றார் அந்தப் பெரியவர்.

அவர் சொன்னபடியே செய்து கொடுத்தான். பழம் விற்பவன்.

அதை வாங்கிக் கொண்டு அபுஹானியாவும் அவருடன் வந்த மற்ற இருவரும் பாலைவனப் பகுதியில் சென்று கொண்டிருந்தார்கள். தண்ணீர் கிடைக்கும் இடமாகப் பார்த்து உட்கார்ந்து பழத்தைச் சாப்பிடலாம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

வழியில் ஒரு நீர்நிலை தெரிந்தது. அங்கே சென்று மூவரும் அமர்ந்தனர். பெரியவர் பொட்டலத்தைப் பிரித்தார். 10 பழங்கள் தானே இருக்க வேண்டும். அதற்குப் பதிலாக 11 பழங்கள் இருந்தன. ஒரு பழம் கூடுதலாக இருந்தது.

அதைக் கண்ட பெரியவர் அபுஹானியா பதறி, "ஒரு காசுக்குப் 10 பழங்கள் என்றுதானே அவர் சொன்னார். தவறுதலாக அந்த வியாபாரி ஒரு பழத்தை அதிகமாக வைத்து விட்டிருக்கிறாரே! இது அவருக்கு நஷ்டமாயிற்றே! இப்போது என்ன செய்வது" என்று யோசித்தார்.

"சரி... இந்தப் பழத்தை பழவியாபாரியிடம் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்" என்று தன் நண்பர்களிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். அதைக் கேட்ட அவரது நண்பர்கள் சிரித்தனர்.

"என்ன இது! வேடிக்கையாக இருக்கிறது. ஒரேயொரு பேரீச்சம்பழத்துக்காக அதைத் திருப்பிக் கொடுப்பதற்காக திரும்பவும் மூன்று மைல் தூரம் திரும்பிச் செல்ல வேண்டுமா? இது தேவைதானா?" என்று கேட்டனர்.

பெரியவர் அவர்கள் கூறியதை ஏற்கவில்லை. "வியாபாரத்தில் நாம் காசு கொடுத்ததற்கு சரியாக ஒரு பொருளை வாங்குகிறோம். அதுதான் நியாயம். அதிகப்படியாக எதுவும் கொடுத்தால் அது விலக்கப்பட்ட பொருள். அது நம்மைச் சேரக் கூடாது. அது பாவம்!" என்று சொல்லிவிட்டு அபுஹனிபா வியாபாரியிடம் சென்றார்.

அவரிடம் ஒரு பழத்தைக் கொடுத்தார். ஆனால் அந்தப் பழவியாபாரியோ, "ஐயா! பெரியவரே! நான் தெரியாமல் அந்தப் பழத்தை உங்களுக்குத் தரவில்லை. உங்கள் தோற்றத்தை கண்டவுடன் எனக்கு உங்கள் மீது மரியாதை ஏற்பட்டது. அதனால் தான் ஒரு பழத்தை அதிகமாகக் கொடுத்தேன். பரவாயில்லை. அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினான்.

ஆனால் இந்தப் பெரியவர் அதற்குச் சம்மதிக்கவில்லை.

"வியாபாரத்தில் வாங்குபவர், விற்பவர் ஆகிய இருவரும் "இவ்வளவுக்கு இவ்வளவு" என்று ஓர் உடன்பாட்டுக்கு வருகிறார்கள். அதன்படி நடந்து கொள்கிறார்கள். அதுதான் சரியான வியாபாரம். அந்த உடன்பாட்டுக்கு ஒத்துப் போவது தான் நியாயம். அந்த நியாயம் தவறி நாம் நடக்கக்கூடாது" என்று சொல்லிவிட்டு ஒரு பழத்தை பழ வியாபாரியிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்.

நேர்மை - நியாயம் இவற்றுக்கெல்லாம் இலக்கணம் அந்தப் பெரியவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் நேர்முகப் பரீட்சை இம்மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதிக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேலதிக விபரங்களை நிறுவன விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும் எனவும் யாழ். உயர் தொழில்நுட்ப நிலையப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

திருமதி. ஜே. மதனராஜன் (சுன்னாகம்), செல்வி. எஸ். பத்மநாதன் (திருநெல்வேலி), எஸ். செல்வஜிந்தன் (கொக்குவில்), செல்வி. வி. பொன்னம்பலம் (ஆனைக்கோட்டை), கே. பிரதீபன் (யாழ்ப்பாணம்), செல்வி. எஸ். காயத்திரி (நல்லூர்), பி. கஸ்தூரி (புத்தூர்), செல்வி ஓ. கந்தசாமி (மல்லாகம்), செல்வி. எம். இ. பத்திநாதர் (யாழ்ப்பாணம்), செல்வி ஆர். நிரோஜி (திருநெல்வேலி), செல்வி. ஆர். ஸ்ரீகாந்தன் (சண்டிலிப்பாய்), திருமதி பாமிலா நடராஜா (மல்லாகம்), கே. சிவராசா பவன் (புலோலி), ஜெ. சஞ்சீவன் (புத்தூர்), வி. கௌமாறன் (அளவெட்டி), எஸ். பகீரதன் (ஆனைக்கோட்டை), பி. கலாறஞ்சினி (நீர்வேலி), ஓ. மந்தாஜினி (யாழ்ப்பாணம்), எம். சி.ஒ. செல்வரட்ணம் (யாழ்ப்பாணம்), ரி. வேணுகோபாலன் (ஓட்டுமடம்), டி. சி. இமானுவேல் (யாழ்ப்பாணம்), எஸ். ஸ்ரீகுமரன் (யாழ்ப்பாணம்), எம். ரை ரன் (பாஷையூர்), எஸ். சோதிவடி வேல் (சண்டிலிப்பாய்), ரி. கோபி நாத் (யாழ்ப்பாணம்), என். டர்சன் (யாழ்ப்பாணம்), எஸ்.ஏ. சண்முகரட் ணம் (யாழ்ப்பாணம்), எஸ். சிவா ஜினி (கோண்டாவில்), எஸ். ரதீபன் (நல்லூர்), எஸ். கௌசிகா (கொக் குவில்), எஸ். தேவகி (கரவெட்டி), எஸ். ஸ்ரீகாந்தன் (நீர்வேலி). (ஓ)

# இடம்பெயர் மக்களுக்கு பஹ்ரைன் 10 இலட்சம் அமெ. டொலர் அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்தோரின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக பஹ்ரைன் பிரதமர் ஷெய்க் கலிபா பின் ஸல்மான் அல் கலீபா 10 இலட்சம் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த உதவித் தொகையையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பஹ்ரைன் பிரதமர் எழுதிய கடிதம் ஒன்றையும் குவைத்துக்கான பஹ்ரைன் தூதுவர் ஷெய்க் கலீபா பின் ஹமாத் அல் கலீபா இலங்கைத் தூதுவர் சரத் திசாநாயக்கவிடம் கையளித்தார்.

குவைத்தில் உள்ள பஹ்ரைன் தூதரகத்தில் நடந்த வைபவம் ஒன்றில் இந்த அன்பளிப்பும் கடிதமும் வழங்கப்பட்டன.

இலங்கையின் சார்பில் இந்த உதவியைப் பெற்றுக்கொண்ட பஹ்ரைனுக்கான இலங்கைத் தூதுவர் சரத் திசாநாயக்க பஹ்ரைன் பிரதமருக்கும் அந்நாட்டு மக்களுக்கும் நன்றி தெரிவித்தார். (ஓ-6)

# இலங்கையில் 30 வருடங்களின் பின் சனத்தொகை மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் 30 வருடங்களுக்குப் பின்னர் சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் 2011 ஆம் ஆண்டில் இந்த நடவடிக்கை முற்றுப் பெறும் என்றும் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் டி.பீ.பி. எஸ். வைத்திய. ரத்ன தெரிவித்துள்ளார்.

10 வருடங்களுக்கு முன்னர் சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அப்போது புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் ஆய்வுகள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதால் அப்பணி முழுமையடையவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள வீடுகள் அந்த வீடுகளில் வசிப்பவர்களின் விபரங்கள் என்பன ஆரம்ப கட்ட நடவடிக்கையாக பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்ற பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)

# வடபகுதி நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ளவர்களுக்கு கண் பரிசோதனை

வடபகுதி நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள கண்களில் வெண்படலம் தோன்றியுள்ள நபர்களை இனம் காண்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது. இதன் கீழ் 8 ஆயிரத்து 700 பேர் இனம் காணப்பட்டுள்ளதோடு அவர்கள் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். இனம் காணப்பட்டவர்களில் 4 ஆயிரத்து 500 பேருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டதாக பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் பாலிதமகி பால தெரிவித்துள்ளார்.

இதேவேளை இனம் காணப்பட்டுள்ள நோயாளர்களின் கண்களில் படர்ந்துள்ள வெண்படலங்களை அகற்றுவதற்கான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு செட்டிகுளம் வைத்தியசாலையில் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக பிரதி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஓ)

# இராசி பலன்

*20.08.2009*
*(ஆவணி 4, வியாழக்கிழமை)*
*அமாவாசை பிற்பகல் 4.26 மணிவரை*
*ஆயிலியம் முற்பகல் 11.04 மணிவரை*
*இராகுகாலம் 1.35-3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35-9.05 மணிவரை*
*செல்வச் சந்நிதி கொடியேற்றம்*
*அமாவாசை விரதம், சித்தாமிர்தம்.*

**மேடம்** - குடும்பக் கவலை, வேலைச் சுமை, காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு.

**இடபம்** - பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், தாய்வழி உறவு, நல்ல முயற்சி.

**மிதுனம்** - தனவருவாய், பிரயாண நன்மை, காரிய ஜெயம், சத்துருஜெயம்.

**கடகம்** - கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், வீண்வார்த்தை, பொருள் விரயம்.

**சிங்கம்** - சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, புதிய பெருள் சேர்க்கை, சயன சுகம்.

**கன்னி** - நண்பர்கள் விரோதம், ஆரோக்கியக்குறைவு, பிதா சிந்தை, காரிய அலைச்சல்.

**துலாம்** - உறவினர் சந்திப்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனலாபம், தேகநலன்.

**விருச்சிகம்** - சுபநிகழ்வு, உற்சாகம், பிறர் உதவி, முயற்சி கைகூடும்.

**தனுசு** - புதிய திட்டமிடல், பித்த ரோகம், வீண்பயம், வாக்கு மேன்மை.

**மகரம்** - காரிய தடங்கல், எதிர்பாராத பகை, கௌரவக்குறைவு, போசன சுகம்.

**கும்பம்** - களஸ்திர நன்மை, நல்ல முயற்சி, நல்ல வரவேற்பு, தனலாபம்.

**மீனம்** - தடைப்பட்ட காரியம் கைகூடும், உடல்நலம், நல்ல வரவேற்பு, தொழில் விருத்தி.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 50 |
| தக்காளி | 15 | 25 | 15 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 100 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 20 | 40 | 20 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 30 | 50 | 30 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 20 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | -- |
| பயிற்றங்காய் | 30 | 50 | 20 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிள்காய் | 30 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 35 | 25 |

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(குருநகர்)

சர்வதேச தமிழ் மாணவர் அமைப்பின் (ITSO) முன்னெடுப்பில் குருநகர் மக்களின் கல்வி சம்பந்தமான தேடலும், நடவடிக் கைகளும் பற்றிய கலந்துரையாடலை நடாத்த குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு நாளை மறுநாள் சனிக்கிழமை மாலை 4மணிக்கு புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சமூகத்தின் அக்கறை கொண்டுள்ள கல்விமான்கள், பொதுநல சேவையாளர்கள், ஆசிரியர்கள் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-39)

## நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த நாடகமும் அரங்கியல் பாட ஆசிரியர்கள் தரவட்டத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை யாழ்ப்பாணக் கல்வி வலய வளாகத்தில் மேற்படி ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

அரங்கியல் கற்பிக் கும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை நோக்கமாகக் கொண்டு புதிய பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நா.சுந்தரலிங்கம் எழுதிய "அபசுரம்" நாடக எழுத்துரு பற்றிய செயலளிக்கையுடனான கருத்தமர்வாக இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தமர்வில் மூத்த நாடகக் கலைஞர்களான எஸ்.திருநாவுக்கரசு (அரசு) , உருந்திரேஸ்வரன் ஆகியோர் வள ஆளுநர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் ஆர்வமுடைய நாடகமும் அரங்கியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் புது வீதி ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் தேவஸ்தானத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் 24ஆம் திகதி காலை 7 மணிக்கு சாந்திகளும், 25ஆம் திகதி மாலை 5மணிக்கு கலாதர்ஷணம், கும்ப பூசைகள் என்பனவும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு பூர்வாங்க சாந்தி கிரியைகளைத் தொடர்ந்து 10.30 மணி முதல் 11.30 மணி வரை பாலஸ்தாபன கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது.

கிரியைகள் யாவும் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறும். (ஓ)

## குளங்கள் புனரமைப்பு

(பொன்னாலை)

வட்டுக்கோட்டையில் மூன்று குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. உப்புவயல் குளம், திக்கிராய் குளம் மற்றும் வளவுக்குளம் என்பனவே புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இக் குளங்கள் புனரமைக்கப்பட்டு வரும் அதேவேளை இக் குளங்களுடன் இணைப்பைப் பேணுவதாக அமைந்திருக்கும் வயல் வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (ஓ-49)

## வலி.மேற்கு பகுதி விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஆர்வம்

(பொன்னாலை)

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இப் பகுதிகளில் பயறு, கச்சான், குரக்கன், எள் போன்ற பயிர்கள் அதிக அளவில் பயிரிட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை இத்தகைய சிறுதானியங்களை அதிக அளவில் பயிரிட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அராலி, பொன்னாலை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்களிலேயே மேற்படி சிறுதானியச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. (ஓ-49)

## வீதி திருத்தக் கோரிக்கை

(பொன்னாலை)

வட்டு மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவான வட்டு.திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள வீதி குன்றும் குழியுமாகக் காட்சியளிப்பதால் பாடசாலை மாணவர்கள் உட்பட போக்குவரத்தில் ஈடுபடுவோர் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் புனரமைக்கப்பட்ட மேற்படி வீதியானது மிகவும் குறுகிய கால இடைவெளியில் குன்றும் குழிகளும் தோன்றி போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து, பொதுப் போக்குவரத்து போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மேற்படி வீதியை சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அப்பகுதி மக்களும், பாடசாலை சமூகத்தவர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஓ-49)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராமகிருஷ்ண வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இவ்வீதியால் பாடசாலை செல்லும் மாணவர்களும் தோட்டங்களுக்குச் செல்லும் பொதுமக்களும் பெரும் சிரமத்திற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இனிவரும் மழைகாலத்தில் இவ்வீதியால் போக்குவரத்து செய்வோர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

ஆதலால் உரியவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு இவ்வீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்து மழை காலத்திற்கு முன் இதனைத் திருத்தித் தருமாறு அப்பகுதி மக்களும் மாணவர்களும் கோருகின்றனர். (ஓ)



நீர்வேலி அச்செழு குடும்ப முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் அபிவிருத்திச் சங்க போசகர் த.பரராசசிங்கம் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.




## சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வித்திணைக்களம், மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் நல்லூர் சிறுவர் மகிழ்வகத்தில் நடத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் கணனிப்பயிற்சி முடித்து வெளியேறிய இதுவரை சான்றிதழ்களைப் பெறாத மாணவர்களை உடன் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சிறுவர் மகிழ்வக நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-134)

## நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் சமயச் சொற்பொழிவுகளும் கலைநிகழ்வுகளும் நிகழ்வில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை "நக்கீரர் வாழ்வில் முருகன்" எனும் விடயம் பற்றி நி.பகீரதன் சொற்பொழிவாற்ற வுள்ளார்.

தொடர்ந்து அரியாலை, ஞானவைரவர், பெரியவிளான் வடகேசரிப் பிள்ளையார், நாவற்குழி அறிவொளி மன்றம் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

✠✠✠

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிரை ஏ.கே.கருணாகரனின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் அணிசெய் கலைஞர்களாக. வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கம் எஸ். மகேந்திரன், கெஞ்சிரா கே.நந்தகுமார், கடம் ரி.வரோதயன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

✠✠✠

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் "கம்பராமாயணம்" பற்றிய இசைச்சொற் பொழிவில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு "கும்பகர்ணன்" எனும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு ஆயுர்வேத பாதுகாப்பு சபைக்கு புதிய நிர்வாக சபை உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக டாக்டர் செ.பரமசிவம் பிள்ளை, பிரதித் தலைவர்களாக டாக்டர் கி.தவமணிதேவி, டாக்டர் செ.வைத்திலிங்கம், செயலாளராக டாக்டர் த.சிங்க அரியரட்ணம், இணைச் செயலாளராக ஐ.கண்ணா, பொருளாளராக டாக்டர் செ.கிருபாரத்தினம் ஆகியோரும் ஏழு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஓ-6)


## செயலமர்வு


(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்12,13 இற்கு புதிய பாடத்திட்டத்திற்கமைவாக கர்நாடக சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-19)









நல்லூர் லயன்ஸ் கழக அனுசரணையுடன் யாழ்.மத்திய கல்லூரி லியோ கழகமும், கலை மாணவர் மன்றமும் நடத்திய க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான தமிழ் பாட வழிகாட்டல் கருத்தரங்கில் கல்லூரியின் அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி நிகழ்வை ஆரம்பித்து உரையாற்றுவதையும், தமிழ் பாட கருத்தரங்கை கலாநிதி எஸ்.எஸ். ஆனந்தன் நிகழ்த்துவதையும் மற்றும் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# "வங்கி அலுவல்களுக்காக... அலுவலக நேரத்தை வீணாக்காதீர்!"



Spirit & Soul









கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இப்போது வருடத்தின் 365 தினங்களும் திறந்திருக்கிறது.

COMMERCIAL BANK

www.combank.lk

(அ-3023)

# நல்லைக் கந்தன் தீர்த்தோற்சவ வி

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



நல்லைக் கந்தனின் இருபத்தைந்தாவது மகோற்சவப் பெருவிழா தீர்த்தோற்சவமாக, இறைவனின் அருள் உற்சவமாக நடை பெறுகின்றது. சண்முக தீர்த்தத்தில் பரமானந்த சாகரமாக ஆனந்தமயமாக காட்சியளிக்கின்றது. அடியார்கள் தம் வினையாவும் போக்கி நல்லருள் சேர்க்கின்ற அருளல் உற்சவம் ஆண்டு தோறும் நடைபெறுவது போல இவ்வாண்டும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் எல்லோருக்கும் நல்லருள் பெருக்கவேண்டும். வையத்தில் அவர்கள் வாழ்வாங்கு வாழ நல்ல வழிகாட்ட வேண்டும். அல்லலுறுவோர்க்கு அபயம் கொடுக்க வேண்டுமென திருவருளை வியந்து பிராத்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.





ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள். நல்லைஆதினம்


## நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனால் நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு,அதனால் நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" எனப் பாடியவர் யோகர் சுவாமிகள்.நம்மண்ணில் மனிதர்களை புனிதர்களாக்கும் புண்ணிய ஷேத்திரம் நல்லூர் கந்தசுவாமி கோவில் என்றால் மிகையன்று. நல்லூரைத் தரிசிக்க வருபவர்கள் நல்ல ஆறுதல் பெறுவார்கள்.

அலங்காரக் கந்தன் என அனைவராலும்போற்றப்படும் நல்லைக் கந்தன் திருக்கோல அழகுக்கு நிகரேது. கோவில் அழகு, கொலு வீற்றிருக்கும் குமரன் அழகு, பூசை செய்யும் குருக்கள் அழகு,பூசை அழகு, ஆடிப்பாடி அழுது கும்பிடும் வழிபாட்டு அழகு வேறு எங்கு காண்போம். நல்லூரான் மணலில் இருந்தாலே மனதிலுள்ள பாரம் இறங்கும். நல்லூரான் வீதியில் நடந்தால் வினைகள் அகலும். சித்தர்கள், யோகிகள், ஞானிகள் மட்டுமல்ல சிறு பிள்ளைகள் கூட நல்லூரை நாடிச் செல்வதில் எத்துணை தூரம் விருப்புடை யோராயுளர். நல்லூர் உற்சவ நாட்கள் வழிபடும் அடியவர் உள்ளத்திற்கு வலிமை சேர்க்கும் நாட்கள். இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற நம்பிக் கையை உணர்த்தும் நாட்கள். எனவே, நல்லூரான் திருவடியை நாடித்தேடி வழிபாடு செய்வோமாக.

*நல்லூரான் அடியவர்*
*ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி*



## பூலோக கைலாசத்தில் தீர்



நல்லூர் என்ற சொல்லை ஆராயுமிடத்து தமிழ்நாட்டை ஆண்ட நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டிநாட்டில் வீரபாண்டிய நல் செய்துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த

சோழநாட்டிற் பெருஞ்சோழ மன்னர்கள் உருவாக்கிய நல்லூர் நல்லூர்,அருபாய நல்லூர், திருநீற்றுச் சோழநல்லூர், திருத் நல்லூர்,கரிகடிரதசோழ நல்லூர் முதலிய நல்லூர்கள் சோழ மன்ன

ஈழத்திலேயும் நல்லூர் எனப் பெயரிலே கிராமங்கள் ஐந்துள, யிலும் களுத்துறையிலும் உள்ளனவாம். இவ்வாறாக நல்லூர் என்ற புக்களோடு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் மூலஸ்தானத்தில் வே

*மூலஸ்தானத்தில் வேல்*

வேல் முருகனது அருளை நல்கும் அருட் கருவியாகக் கருதப்படுகின் . வேல் வழிபடும் ஆதிமரபு இன்றும் தமிழர்களிடையே தொன்று தொட்டு நிலவி வருகின்றது.

இன்று நல்லூரில் மட்டுமன்றி, செல்வச் சந்நிதியிலும் கதிர்காமத்திலும் முருக வழிபா அழகிய வேற்பெருமானாக வீற்றிருந்து அருள்பாலிப்பதுடன் நம்புபவர்களுக்கு அபயமளிக்கின் வழிபாடியற்றப்பட்டு பவனியாக உலா வந்து வணங்கப்படுகின்றது.

*அபயம்ளிக்கும் ஆறுமுகப் பெருமான்*

நல்லூரில் தெற்கு நோக்கி ஆறுமுகப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். பாலித்து வருகின்றார்.ஆறுமுகப் பெருமானின் தோற்றம் பற்றிய பலவிதமான கரு அகோரம், வாமம், சக்தியோசாதம் என்று சிவபெருமானுடைய ஐந்துமுகங்களுடன் உமாதேவிய ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினார் என்பது ஒரு கருத்து.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மேல்கீழ் என்ற எங்கும் நிறைந்த தன்மையைக் காட் கனைவிடச் சிறந்த அழகன் இல்லை. எனவே தான் அவன் பெயர் முருகன். அவனைவிட பெயர் குமரன். அவனைவிட பெரிய ஞானி இல்லை. எனவே தான் அவன் ஞானபண்டிதன். இவ்வா எங்கள் நல்லூரில் பன்னெடுங்காலமாக அருளாட்சி செய்கின்றான். நல்லூர் மட்டுமல்ல உலகமே நேற்றைய குணம் பூலோக கைலாசத்து இரதோற்சவப் பெருவிழா இலட்சோபலட்சம் மக்களுடன்

*பஞ்ச கிருத்தியத்தில் தீர்த்தம்*

இன்று பஞ்ச கிருத்தியத்தில் அருளல் தீர்த்தோற்சவப் பெருவிழா நடைபெறுகின்றது. மான் எழுந்தருளிவருவது காத்தலையும்,தேரில் ஆரோகணித்து வருவது அழித்தலையும் அருளலையும் குறித்து நிற்கிறது. தீர்த்தம் ஆட பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளும் காட்சி நல்லூரி "சண் முகதீர்த் தம்" புண்ணிய தீர்த்தமாக எம்பாவமெல்லாம் போக்கும் பரமானந்த சாகரமாக முருகப்பெருமான் திருவருள் பெருக்கிய தீர்த்தத்தில் "தீர்த்தோம் பாவம் தீர்த்தோம்" ஆடிமகி மானின் அருள் நலம் பெருகியது.

வர்ணனைக் கலாநிதி. மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்
வானொலி, தொலைக்காட்சி,வர்ணனை ஒலிபரப்பாள


"சண்முக தீர்த்தத்தில் ஆடினோம் சரணம்"
அம்பாள் மரக்காலை
Ambal Timber Depo
No,261 Point pedro Road
Nallur -Regno, NAL/58

"அருள் தந்தெமை ஆளவேண்டும்"
சண் றெக்கோடிங் அன்ட் வீடியோ
இல.421/A பருத்தித்துறை வீதி,
நல்லூர் ,யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 6507-

"ஆர்த்த பிறவித் துயர் கெட தீர்த்தமாடுவோம்"
அரவிந்த் வீடியோ புகைப்படச் சேவை
இல.309, நாவலர் வீதி
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.
தொ. பே. 021 222 2190
077 7162339

"நல்லைக் கந்தன் புகழ் பாடுவோம்"
ASEER VANIGA NILAIYAM
Paper,stationary, Exercisce Books and wedding cards.
202 A, K.K.S. Road,
Jaffna.
T.P.021 222 2842 -fax 021 222 2842

"நலமருளும் நல்லைக்கந்தனின் தீர்த்தமாடி திருவருள் சேர்த்து மகிழ்ந்தோம்"
"சேமிப்பே உங்கள் செல்வம்"
தேசிய சேமிப்பு வங்கி
இல 496, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.-

"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"
கோவில் அபிஷேகப் பொருட்கள் , நாள் அத்திபாரப்பொருட்கள், நாள் சரக்கு வகைகள், எண்ணெய் வகைகள்,கூந்தல் வளர்ச்சிக்கேற்ற C.S.R. பொன்னாங்காணித்தைலம், பீனிய வியாதிக்குரிய பிருங்கமிலாதி தைலம், நாட்பட்டநோ, வாதத்திற்குரிய C.S.R. தாளங்காய் எண்ணெய், பொருமல் சமிபாடடையாத தன்மை என்பன வற்றுக்குரிய C.S.R. ஓமத்திரவியம் (குழந்தைகள் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்)
இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றிட
க. செ கைலாசம் பிள்ளை அன்சன்ஸ்
(சித்த ஆயுர்வேத மருந்துகள் அபிஷேகப் பொருட்கள் விற்பனையாளர்)
5(76) பெரியகடை -யாழ்ப்பாணம் .
தொ.பே. 222 2912

# புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை ஓகஸ்ட் -2009

ஆசிரியர் T.மன்மதகாந்தன்
ஆசிரியர் T.திலீப்குமார் --கொழும்பு

வினா இலக்கம் 02
பரீட்சை இலக்கம் 16
நேரம் :-1 மணி15 நிமிடம்

◆பின்வரும் விபரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

நாம் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று எவ்வளவு ஆசைகளை மனதில் ஏற்றி வைத்த மக்களுக்கு ஏற்பட்ட கதியினை கணிப்பிட முடியாது. உலகத்தையே துன்பத்தில் ஆழ்த்தி விட்டது இந்த சுனாமிப்பேரலை. கணக்கிட முடியாத உயிர்களை, உடமைகளை எல்லாம் இழந்த மக்கள் யாரை நினைக்கப் போகிறார்கள். யார்தான் உதவி செய்யப் போகிறார்கள். குடும்பமே முற்றாக அழிந்தவர்கள். குடும்பத்தில் தனியாகத் தவிக்கும் சிறுவர்களை நினைத்தால் வேதனை வருகிறது.ஆண்டவர் இப்படிக் கணக்கை முடித்தாரா என்பது கேள்விக்குறிதான். எனவே நாங்கள் துன்பப்பட்டவர்களுக்கு இயலுமான உதவியைச் செய்தல் வேண்டும்.

01. மேல் கூறப்பட்ட விபரணம் எதைப் பற்றியது?

02. உடமைகள் என்பது எவற்றைக் குறிக்கும்?

.03. உயிர் என்பதன் ஒத்தசொல் ஒன்று தருக?

04. ஆசை என்பதன் எதிர்ச்சொல் ஒன்று தருக?

05. உமது மனதில் சோகத்தை ஏற்படுத்தும் வசனத்தை எழுதுக?

06. குடும்பம் என்பது யாரைக் குறிக்கும்?

07. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை உள்ள பெயர்ச்சொல் தருக?

08.“ இன்பம்” என்பதன் எதிர்ப்பதம் இரண்டு உண்டு அவற்றைக் கூறுக?

09. வாழ்க்கை யாரினால் நிர்ணயிக்கப்படுகிறது எனக் கூறப்படுகின்றது?

10. கூடுதலாக பாதிக்கப்பட்ட மக்கள் எப்பகுதியை அண்டி வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர்?

◆பின்வரும் பெரியார்களின் பெயர்களை எழுதுக.

பாரதியார், சித்திலெப்ப,மகாத்மாகாந்தி,
சேர்.பொன்.இராமநாதன், விவேகானந்தன், டி.பி.ஜயதிலக்க

11. 
12. 
13. 
14. 

.................... .................... .................... ....................

◆பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

15. பின்வரும் தாவரங்களில் விதைமூலம் மட்டுமே விளைவது?
1) கொத்தமல்லி 2)அலரி 3)நொச்சி 4)பூவரசு

16. இலங்கையில் மிக நீண்ட நதி
1)களனி 2)மகாவலி 3)வளவை 4)மல்வத்துஓயா

17.இலங்கையில் இரு மதத்தவர் கொண்டாடும் ஒரு தினம்
1)நத்தார் 2) எசல பெரஹரா
3)ரம்ழான் 4) சித்திரை வருடப்பிறப்பு

18.மின்சாரத்தினால் பாதிக்கப்பட்டவரை என்ன செய்யக்கூடாது
1) நாம் அவரை கையால் பிடித்து இழுத்தல்
2) காய்ந்த மரத்துண்டுகளைப் பயன்படுத்துதல்
3) பிரதான ஆளியை நிறுத்தல்
4) றப்பர் உறைகளை அணிந்து உதவுதல்

19.சந்தையில் பொருட்களை வாங்கும்போது கவனிக்க அவசியமற்ற ஒன்று
1) விலை 2)நிறை
3)முடிவுத்திகதி 4)விளம்பர அலங்காரம்

◆அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லைக்கொண்டு இடைவெளியை நிரப்புங்கள்.

20. “கவிஞன்”பாட்டை (பாடினான்/ இயற்றினான்)
....................................................

21. பசுக்கன்று தன்தாயைக் கண்டு (கத்தியது /கூவியது)
....................................................

22.மேடையில் நின்று அவன் (பாடினான் /படித்தான்)
....................................................

23. திக்குத் தெரியாத காட்டில் அவன் அலைந்து (திரிந்தான்/நடந்தான்)
....................................................

24. அவசரமாக அவன் தன்நடையை (திரிந்தான் / கட்டினான்)
....................................................

◆பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

25. வீதி விளக்கில் செம்மஞ்சள் நிறம் பயணத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்கான சமிக்ஞையாகும் ( )

26. ஆடையில் தீப்பற்றினால் விரைவாக ஓட வேண்டும் ( )

27. மின்னினால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக செயற்கை சுவாசம் அளிக்க வேண்டும். ( )

28. இலங்கையின் மிகப்பெரிய மின்னுற்பத்தி நிலையம் விக்டோரியா வலு நிலையம் ஆகும். ( )

29. ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடம் கழிமுகம் எனப்படும் ( )

◆ கீழே உருக்களுள் காணப்படும் ஒவ்வொரு பூச்சியின் பெயரையும் அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

நுளம்பு /வீட்டு ஈ /கரப்பான் பூச்சி / எறும்பு

30. 
31. 
32. 
33. 

.................... .................... .................... ....................

◆ பின்வரும் தொடர்களின் கருத்தினை தமிழில் எழுதுக.

34. Come in:-.......................... 35.Silence Please:-....................

36. Thank you:-...................... 37.What is this:- ......................

◆ பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

38.பாசல-................................ 39.சுதுபா(ட்)ட-................................

40. கிரி-................................ 41.குருத்துமி-................................

◆ பின்வரும் வீதிக்குறிகள் வெளிப்படுத்துவது யாது என்பதை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை வீதிக்குறிக்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

42.  ................................ 1)வாகனங்கள் நிறுத்துமிடம்

43.  ................................ 2) சிறுவர்கள் கடக்கும் இடம் முன்னால்

44.  ................................ 3)பாதசாரிகள் கடக்கும் இடம்

45.  ................................ 4)ஒலி எழுப்பத் தடை

46.  ................................ 5)பாதசாரிகள் கடக்கும் இடம் முன்னால்

6)பஸ் தரிப்பிடம்

◆ சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

47. இரு எண்களைப் பெருக்கும்போது கிடைப்பது 20. அவ்விரு எணகளையும் கூட்டும்போது கிடைப்பது 9. அவ்விரு எண்களும் எவை?

48. ஒரு விருந்துபசாரத்தில் மொத்தமாக 80 பேர் பங்குபற்றினார்கள். அதில் பெண்களின் எண்ணிக்கை 24 ஆகும். எனவே அங்கு காணப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை யாது?

49. ஒரு செவ்வக வடிவ மைதானத்தின் நீளம் 250 மீற்றர். அகலம் 150 மீற்றர். இதன் சுற்றளவு எத்தனை மீற்றர்?

50. பாடசாலை ஒன்றில் 352 மாணவர்கள் உள்ளனர். இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றுக்காக ஒவ்வொருவரிடமிருந்தும் 15 ரூபா அறவிடப்பட்டால் சேர்க்கப்படும் மொத்தப் பணம் எவ்வளவு?

51. பயணம் ஒன்று 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் வரை நடைபெற்று பிற்பகல் 9.50 மணிக்கு நிறைவடைந்தது. பயணம் ஆரம்பித்த நேரத்தை எழுதுக?

52. 215.3 உடன் 34.8 இனைக் கூட்டுக?

53. 53 லீற்றர் பாலை எத்தனை 250 மில்லிலீற்றர் போத்தல்களில் அடைக்கலாம்?

◆ பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான அருஞ்சொற் பதங்களை தேர்ந்தெடுத்து அதன் எண்களை எழுதுக.

54. பௌத்த துறவிகள் வாழும் இடம் ( ) 1.தானியக்களஞ்சியம்

55. யானைகளைக் கட்டிவைக்கும் இடம் ( ) 2.விகாரை

56. பரிசோதனை நிகழ்த்தும் இடம் ( ) 3.கட்டுத்தறி

57. தானியங்களை வைக்கும் இடம் ( ) 4.வெண்பா

58. தமிழில் வழங்கும் மரபு வழிப்பட்ட பாவகை ( ) 5.ஆய்வுகூடம்

◆ பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக.

கத்தரிக்கோல் / கைவில்லை / பாக்குவெட்டி / கவர்ச்சுத்தியல
அரம் / தீதாள் / கைத்தாளம் / உடுக்கு

59. சிறு பொருட்களைப் பெருப்பித்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

60. கத்தியைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

61. இரும்பாணியைக் கழற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

62. தாளம் போடுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

63. தைக்கும் போது பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்

பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக

| பையிலுள்ள பலூன்களின் நிறம் | எண்ணிக்கை | பழுதான பலூன்களின் எண்ணிக்கை | நல்ல பலூன்கள் |
|---|---|---|---|
| நீலம் | 63 | 17 | ........................ |
| பச்சை | 46 | 08 | ........................ |
| மஞ்சள் | 70 | 15 | ........................ |
| ஊதா | 25 | 04 | ........................ |
| சிவப்பு | 38 | 07 | ........................ |

64. பையிலுள்ள பலூன்களில் நல்ல பலூன்களின் எண்ணிக்கையை இடைவெளியில் நிரப்புக.

65. பையிலுள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?

66. பையிலுள்ள பலூன்களில் நல்ல பலூன்களின் எண்ணிக்கை யாது?

67. இங்கு காணப்படும் பலூன்களில் அதிகமாக உள்ள நிறம் எது?

*நான் கண்ட வீதி விபத்து என்னும்* தலைப்பில் சரியான எழுவாய் பயனிலையுடன் கூடிய கருத்துள்ள ஆறுவாக்கியங்கள் எழுதுக?

68. ____________________

69. ____________________

70. ____________________

71. ____________________


72. ____________________

73. ____________________

## வினாத்தாள் 01 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01. (01) | 02. (03) | 03. (02) | 04. (01) | 05. (02) | 06. (03) | 07. (01) |
| 08. (03) | 09. (04) | 10. (02) | 11. (01) | 12. (02) | 13. (03) | 14. (02) |
| 15. (02) | 16. (03) | 17. (02) | 18. (01) | 19. (01) | 20. (02) | 21. (02) |
| 22. (02) | 23. (01) | 24. 14cm | 25. கிராம் | 26. லீற்றர் | 27. மீற்றர் | 28. பிடி |
| 29. டசின் | 30. (01) | 31. (03) | 32. (02) | 33. (03) | 34. (02) | 35 (03) |
| 36. (01) | 37. (01) | 38. (02) | 39. (02) | 40. (03) | | |

# விழா சிறப்பு மலர் -2009.08.20



## ...ில் தீர்த்தோற்சவம்

...ிழ்நாட்டை ஆண்ட அரசர் பலர் தம் பெயர் விளங்குமாறு பல ... விரபாண்டிய நல்லூர், அரசகேசரி நல்லூர்,மானா பரண நல்லூர், ... குலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன. ...ருவாக்கிய நல்லூர்களைச் சாசனங்களில் காணலாம்.முடிகொண்ட ...நல்லூர், திருத்தொண்டர் தொகை நல்லூர், சிவபாதசேகர ...ர்கள் சோழ மன்னருடைய விருதுப் பெயர் பெற்றபதிகளாகும். ...ாமங்கள் ஐந்துள, மற்றைய நாலும் பூநகரியிலும் குருநகர் பகுதி ...ாக நல்லூர் என்ற சொல்லுக்கு சிறப்புக்களுண்டு.அத்தகைய சிறப் ...லஸ்தானத்தில் வேல் காணப்படுகின்றது.

...கின்... வே...ானத்தினதும் அறிவினதும் அடையாளம். வேலை ...வி வருகின்றது.

...ும் முருக வழிபாடு உண்டு. இந்த ஆலயங் களில் மூலஸ்தானத்தில் ...க்கு அபயமளிக்கின்றது. இத்தகைய "வேல்" மஹோற்சவ காலங்களில் ...

...ருள்பாலிக்கின்றார். அவரே நேரில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் ...பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டாலும்,ஈ'சானம்' தற்புருஷம், ...களுடன் உமாதேவியாரின் ஒரு முகம் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ...ரு கருத்து.

... தன்மையைக் காட்டுவது ஆறுமுகம் என்பது மற்றொரு கருத்து. முரு...கன். அவனைவிட சிறந்த இளைஞன் இல்லை. எனவே தான் அவன் ...ண்டிதன். இவ்வாறாக பல் வகைச் சிறப்புக்களால் பெரு மையுடைய முருகன் ... மட்டுமல்ல உலகமே அவனில் பேரருட் திறத்தினால் சுட்டுண்டு நிற்கிறது. ...ட்சம் மக்களுடன் மிகச் சிறப் பாக பக்திபூர்வமாக நடைபெற்றது.

...டைபெறுகின்றது. கொடியேற்றம் படைத்தலையும், திருவீதியில் பெரு... அழித்தலையும் மௌன உற்சவம் மறைதலையும், தீர்த் தோற்சவம் ...ம் காட்சி நல்லூரில் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்துவிடுகின்றது. ...ானந்த சாகரமாக அமைந்து விடுகின்றோம்.அடியவர்கள் எல்லோரும் ...தீர்த்தோம்" ஆடிமகிழந்து பக்திப் பரவசமாயினர். எல்லோருக்கும் பெரு...

## பிரார்த்தனைச் செய்தி



யாழ்ப்பாண இராச்சியத்தின் இராசதானியாக விளங்கியது நல்லூர். அந்த நல்லையம்பதியில் வீற்றிருந்து நாடிய அடியவர்கள் வினை தீர்த்து அருள் பாலித்து கொண்டிருக்கும்நல்லை கந்தனின் தீர்த்தோற்சவப் பெருவிழா இன்று .

பல்லாயிரக் கணக்கான முருகன் அடியவர்களின் அரோகரா ஒலியுடன் அவர்கள் உள்ளம் பரவசமடையப் பக்தி பூர்வமாக தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. ஆலயங்களில்நடைபெறும் மகோற்சவங்களில் விஷேடமா னது தீர்த்தோற்சவமாகும். அது இறைவனின ஐவகைத் தொழில்களில் அருளல் தொழிலை குறித்து நிற்கின்றது.

நல்லூர் சந்நிதானத்தில் அமைந்துள்ள ஷண்முகதீர்த்தத்தில் பஞ்சமூர்த்திகளாக தீர்த்தமாடி அசைந்தாடி வரும் அழகுக் காட்சி காணக்கண் ஆயிரம் வேண்டும். நாம் அதை காணக்கிடைத்தமை எமது தவப்பயனே. எமது மக்கள் அனைவரும்துன்பம் நீங்கி இன்பங்கான கலியுகவரதனாம் தமிழ் கடவுள் முருகப்பெருமானின் அருள் வேண்டி மனம், மொழி மெய்களால் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்**
**நிபுணத்துவ ஆலோசகர் கல்வி அமைச்சு இசுறுபாயா.**

## நல்லூர் கந்தனின்அருள் பெற வாரீர்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று தீர்த்தோற்சவம். ஆலய மகோற்சவங்கள் ஐந் தொழிலை குறித்து நிற்கின்றது. அக்கினி சுவாலை வடிவொத்தது தேர். நேற்றைய தினம் தெய்வானை வள்ளியுடன் சண்முகப் பெருமான் இரதத்தில் ஆரோகணித்து பவனி வந்த திருக்காட்சியை காண பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடி கந்தனின் தேர் வடம் பற்றி இழுத்தனர். இவ் தேர்த் திருவிழா அழித்தலையும் தீர்த்த திருவிழா அருளலையும் குறித்து நிற்கின்றது.





தீர்த்தம் என்ற சொல் தீர்த்தோம் என்பதில் இருந்து வந்தது. ஆர்த்த பிறவித்துயர் தொட நாம் ஆர்தாடும் தீர்தம் என்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.


சிவனுக்கு அபிஷேகித்த நீர் குருவின் பாதங்களை கழுவிய நீர் கோவில் களிலுள்ள புண்ணிய நீர் நிலைகள் தீர்த்தம் என்பர். இவ் தீர்த்தத்தினை இடது கையின் மேல் வலது கையை வைத்து வாங்கி சுட்டுவிரல் பெருவிரலடியில் வைத்து பருகுதல் வேண்டும். பருகியமிகுந்த தீர்த்தத்தை கண்ணில் ஒற்றி தலையில் துடைத்தல் வேண்டும்

புனித நீர் நிலைகளில் புண்ணிய காலங்களில் கோயில் தீர்த்த திருவிழாவில் நீராடும் போது இறைவனின் பக்தி வெள்ளத்தில் மூழ்குகின்றேன் என்றும் நீரானது எனது உடல் அழுக்குக்களை கழுவுவது போல நாம் செய்த பாவத்தையும் கழுவ வேண்டும் என எண்ணிப் பிரார்த்தித்து தீர்த்தமாட வேண்டும். நல்லூர் தீர்த்த பெருவிழாவில் பஞ்சமூர்த்திகளாக இன்று விநாயகரும் இச் சாகிரியா சக்திகளாக தெய்வானை வள்ளி சமேதராக ஞான சக்தியான தங்கவேற் "பெருமானும் சண்டேஸ்வரருமாக எழுந்தருளி ஆலய சண்முக தீர்த்தத்தில் தீர்த்தமாடி தன்னை நாடிவந்த பக்தர்களின் வினை கெடுத்து அருள்பலிக்கின்ற திருக்காட்சியைக் காண பல்கோடி கண்வேண்டும். இவ் நிகழ்வை காணவும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்யவும் யாழ். குடாநாட்டிலிருந்து மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் வந்து நல்லூர் திரு வீதியை நிறைந்திருப்பதை காணலாம். சித்தர்கள் ஞானிகள் பாதம் பதிந்த இவ் திருவீதியில் தமது கால்களைப் பதிக்க முடியாதா என்று உலகின் பல பாகங்களில் இருந்தும் ஏங்கும் பக்தர்களை காண்கின்றோம். நாமும் அவ் மகத்துவத்தை உணர்ந்து செயற்படுவதும் மிகச் சிறப்பாகும். ஆலய மகோற்சவ காலத்தில் உடல் உள நல சமூக சமுதாய மேம்பாட்டிற்கான நிகழ்வுகள் ஆலய சூழலில் இடம் பெறுவது காலத்தின் கட்டாய தேவையும். அவசியமுமாவதுடன் பலரை சிந்திக் கவும் வைக்கின்றதெனலாம். இவ் தீர்த்தோற்சவப்பெருவிழாவில் நாமும் எம் வினைகளை தீர்த்தருள வேண்டுவதுடன் எல்லோரும் இன்புற்று வாழ இறைஞ்சுவோமாக !

**தில்லை ரவீந்திரநாதன் ஆசிரியர்**
**தலைவர் கட்டைப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்**









மலராக்கம்:-தில்லைநாதன்- ரவீந்திரநாதன்
(ஆசிரியர், செங்குந்த இந்துக் கல்லூரி)


## நல்லூர் முருகன் தீர்த்தம்


நல்லையி லருறை வாரி நல்கிடங் குமரா
இன்று
ஒல்லையிற் தீர்த்த மாடி உலாவரும் வேலை
துன்பம்
இல்லையென் றாகி நாங்கள் இன்பிளிற்
திளைத்து வாழ
வல்லவுன் மனமி ரங்கி வாழ்புவி ஏற்றி
வையே


கா.சிவபாலன்















"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்"
**யாழ். காலணியகம்**
Yarl trades Center Agents for Bata
11 modern market- Hospital Road
-Jaffna. T.P.021 222 3152
பாட்டாவின் மகிழ்ச்சிகரமான செய்தி
50 % கழிவுடன் பாட்டா பாதணிகளை
பெற்றுக்கொள்ளலாம்


"விழிக்குத் துணை திருமென் மலர்ப் பாதங்கள்"
**க.கு.கந்தையாபிள்ளை அன் சன்**
318, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

"நல்லைநகர் செவ்வேளே சரணம்"
**குணசேகரம் பல்பொருள் வாணிபம்**
இல, 517,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

"மொழிக்கு துணை முருகாவெனும் நாமங்கள்"
மாணவர்களுக்கோர் சிறந்த வழிகாட்டி வெற்றி இலக்கு
பரீட்சைப் பயிற்சி வினாத்தாள்
தரம் 1,2,3,4,5,6,7,8,9,10,11 சகல வகுப்புக்களுக்கும்
வெளி வருகின்றன. வினாத்தாள் தேவைப்படும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
**தயா அச்சகம்**
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (நாவலர் பாடசாலைக்கு முன்பாக, மனோகரா தியேட்டர் சந்தி

"வேலை வணங்குவதே எமக்கு வேலை"
**SDS Computer Services**
For All Your IT Solution
# 328 ,Hospital Road , Jaffna.
SALES
REPAIR & MAITENANCE
SOFTWERE DEVELOPING
WEB DESIGNING
..... And Many More
: 021-4590686
: 021-222 8418
:0777 874705

"நலம் பெருக்கிடும் பரமானந்த சாகரம் நல்லைக்கந்தனின் சண்முக தீர்த்தம்"
உங்களின் உடலினை நீங்கள் கட்டுக் கோப்புடன் வைத்துள்ளீர்களா? இதோ அதற்கான தீர்வு எம் மிடமிருந்து
இதோ! யாழ். மண்ணில்
**ESer Marketing (Pvt) Ltd**
இல 38, மணிக்கூட்டு வீதி,
(போதனா வைத்தியசாலைக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.





# தேரோடிய திருவீதியில் நேற்றுப் பாடிய கவிதைப் பாமாலைகள்

## நல்லைக் கந்தனே முருகா உனது அருள் மழை

அழகு நிறைந்த நல்லையம்பதியிலே
அலங்காரக் கந்தனவன்! - அங்கு
முருகனைக் கண்டவன் உளங்குளிர
அருள்மழை சொரிகின்றவன்!
சிங்காரச் சிறப்புடன் உன் சித்திரத் தேரினிலே
அருட்பவனி செய்யும் முருகா
அனைத்துயிர்க்கும் அருளினைப் பொழிவாய்
நல்லையம் பதிவாழ் நல்லைக் கந்தா

G.மகிந்தன் - நயினை

## அச்சம் நீக்கி எமையாள தேரேறி வருவாய்

அன்பருள்ளங் கொள்ளை கொண்ட நல்லூர் கந்தா
பச்சை மயில் வாகனனே பாலகனே முருகா
அச்சம் நீக்கி எமையாள தேரேறி வருவாய்
அவனியில் அமைதி ஆண்டிடவே அருள்வாய்
நீண்டு வளருயர் கோபுரம் கொள்திரு நல்லையிலே
ஆண்டு திருவரு ளீபவன் அற்புதன் குமரா
துன்பத்தை துரத்தி துயர்களை விலக்கி
உருக்குலைந்து போகாமல் உலகம் உய்ய
தூய்மையும் அன்பும் துலங்கிடச் செய்வாய்

சோ. கல்யாணி - கரவெட்டி

## சித்திரத் தேரில் வேலவன்

சித்திரத் தேரில் வரும் சிங்கார வேலவனே
சீரற்ற தமிழ் மக்கள் வாழ்வில்
சுடரொளி ஏற்றிடுவீர்
சூரனை வதம் செய்த
செவ்வேல் கொண்ட வடிவேலவனே
சேவற் கொடியோனே மயில் வாகனனே
சித்திரத் தேரில் வந்து சீர்தூக்கிடுவீர்
சீர்குலைந்த நம் வாழ்வை

க.தர்ஷினி பாண்டியந்தாழ்வு

## நல்லையம்பதியொரு - தேன்கூடு

நல்லூர் கந்தனின் தேர் வடம் பிடித்து
நாவார நல்லை முருகனை பாடு
நாளை சந்ததிக் கென்றொன் றுரைப்பேன்
நம்பினால் நம்புங்கள் நல்யைம்பதியொரு - தேன்கூடு
ஆளுந்திறனதுவாக யாருக்கு முண்டெனினும்
அழகு திரு முருகனை யார் மறப்பார்
அளவோடு வாழ நீ எளிமையை தேடு
அலங்கார கந்தன் என்றும் உன்னோடு

தில்லை. ரவீந்திரநாதன்-ஆசிரியர்

## தேரேறி வருகின்ற அன்பனே

தேரேறி வருகின்ற அன்பனே!
அறநெறியின் அருள்வடிவே
இலங்கைத் திருநாட்டின்
தீப கற்பமாம் யாழ்ப்பாணத்தில் அமர்ந்து
திக்கெட்டும் அருள்புரியும் திருமுருகா
வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின்
புலமை வழி ஒழுகாது
அழிந்திடும் இளம் சிறார்களை
வாழ வழிகாட்டிடுவாய்.

க. திருநீபன்- சாவகச்சேரி

## வினையறுக்க வேல் கொண்டு வா

நல்லையம்பதியில் வாழும் தொல்வினை அகற்றும் கந்தா
கொல்லையில் வள்ளியாளை கரமது பிடித்த வேலா
தந்தைக்கே உபதேசம் தந்த எம் கருணை வேலா
மயிலது ஏறிநின்று உலகது சுற்றி வந்த உன்னதத் தல்லவா
அடியவர் குறைகள் தீர்க்க ஆண்டியாய் வந்தவா
சூரனை அழித்து பக்தர் தர்மத்தைக் காத்த வேலா
நல்லையம்பதியில் நீயும் அமர்ந்தனை எதற்கு வேலா
தேரேறி வந்து எங்கள் தேசமதைக் காத்திடய்யா
பார்போற்றும் பக்தரெல்லாம் உன் தேர்பார்க்க வருகின்றார்
உன்தடம் பதித்த பக்த்ரெல்லாம் வடம்பிடிக்க வருகின்றார்
தேரேறி வந்து எங்கள் தேசமதைக் காத்திடய்யா

ந. பஞ்சசீலன் -அச்சுவேலி.

## தேரேறி வருகின்ற தேவகுமாரனிடம் தேம்பியழுகின்றோம்

நல்லருள் புரியும் நல்லைக் கந்தனுக்கு நல்லதாம் தேர்த்திருவிழா
தொல்லைகள் தொலைந்திடும் தொந்தி வயிற்று தம்பிக்கு தேர்த்திருவிழா
செல்நெறியும் செந்தமிழும் செழிப்பும் விழா திருக்கப் பெருவிழா
வல்வினைகள் விலக்கிட நலம்தரும் வள்ளிமணாளன் அருள்விழா

நீதி நிறைந்திட நிறைவாய்க் கிடைத்திட (நீ) நிதானந்தா
ஆதித் தமிழ்ச்சாதி வீதிக்கு வந்ததால் பாதியுமில்லை ஜோதியுமில்லை நியாந்தா?
பீதியிலுறைந்து நாதியுமின்றி கோதாய்ப் போகாக் கோலந்தா
கதியின்றிக் கலங்கும் கண்ணீர்க் கதவடைக்க கந்தா சுகந்தா

பள்ளத்தை நாடிவருது வெள்ளம் அதில் மூழ்குது பல்லாயிரமுள்ளம்
முட்கம்பி வேலிக்குள் முள்ளும் கல்லும் முருகா எனும் நாமம் சொல்லும்
கள்ளமில்லா உள்ளமது துடித்துத்துஞ்சும் தெள்ளு தமிழ் வாழ்வின்றி அஞ்சும்
வள்ளத்தை அழிக்க அலை அள்ளும் வள்ளி மணாளனே இனி தஞ்சம்

அ. லிங்கராஜ் - (ஆசிரியர்)

# ஆவணி மாதப் பலன்கள்

## இடபம்

(கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருகசீர்ஷம் 1,2 பாதங்கள் வரை)

முன்னேற்றம் ஒன்றையே முக்கியக் குறிக்கோளாக்கிக் கொண்டு செயல்படும் இடப ராசி நேயர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் சுக்ரன் விரயாதிபதி செவ்வாயுடன் இணைந்து சஞ்சரிப்பதால், வரவும், செலவும் சமமாகும் விதத்திலேயே இருக்கிறது. சேமிப்புகள் கரையலாம். எதையும் சிந்தித்து முடிவெடுப்பது நல்லது. அர்த்தாஷ்டமச் சனி ஆதிக்கம் ஒரு புறம் இருந்தாலும், அது விரைவில் விலக இருப்பதால் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல் குறையும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

சனியுடன் சூரியன் இணைந்து சுக ஸ்தானத்தில் இருப்பதால் உறவினர் வகையில் பகை உருவாக வாய்ப்பு உண்டு. எனவே அருகில் இருப்பவரை அனுசரித்துச் சென்றால் அமைதியை எந்நாளும் வரவழைத்துக் கொள்ளலாம். வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் கவனம் தேவை. விபத்தில் இருந்து விடுபட வாகன மாற்றங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

கரைந்த சேமிப்புகளை என்னதான் ஈடுகட்ட முயற்சி செய்தாலும் ஏதேனும் ஒரு வழியில் செலவு வந்து கொண்டேயிருக்கும். அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அலைச்சல் அதிகரிக்க வைக்கும் இம்மாதத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கப்போவது உறுதி.

தொழில் ஸ்தானாதிபதி சனி புதனுடன் இணைந்து உலா வருவதால் மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்போடு புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும். சனி முற்றிலும் விலகிய பிறகு புது முயற்சிகளில் ஈடுபடுவது நல்லது. தேக நலன் சீராக இருக்கவும், செல்வ வளம் பெருகவும் காகவாகனத்தானை முறையாக வழிபட்டு வருவது நல்லது.

குருவின் வக்ர இயக்கம் மகர ராசியில் இருப்பது நன்மைதான். அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்' என்பதற்கேற்ப முயற்சி செய்யாமலேயே முன்னேற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

உயர் பதவியிலிருப்பவர்களுக்கு திடீர் பதவி மாற்றம் தித்திப்பாக அமையும். வக்ர குருவினால் வளர்ச்சியை நீங்கள் காண வேண்டுமானால் அக்கறை காட்டுவது ஆலய வழிபாட்டில் தான். எனவே சிவாலயத்தை நோக்கி அடியெடுத்து வைத்து தென்முக கடவுளை இன்முகத்தோடு வழிபாடு செய்தால் நன்மைகள் வந்து சேரும்.

ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் கடகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தொட்ட காரியங்கள் வெற்றி பெற உங்கள் உடன்பிறப்புகள் துணையாக இருந்து கை கொடுத்து உதவுவர். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும்.

சொத்து பிரிவினைகள் சுமூகமாக முடியும். பெண் பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகன்று புதிய பணியாளர்களைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொலை தூரத்திலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் ரீதியாக எடுத்த முடிவுகளை மறு பரிசீலனை செய்வீர்கள்.

செப்டெம்பர் 16 ஆம் திகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக மாதக் கடைசியில் பயணங்கள் அதிகரிக்கும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள் கல்வி வளர்ச்சிக்காக எடுத்த முயற்சி கைகூடும்.

விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயின் உடல் நலம் சீராகும். சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிபிற்கு வரும். விலங்கு வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். உறவினர் வருகை அதிகரிக்கம். செய்தொழிலில் சிறப்பான முன்னேற்றம் காண ஸ்தல வழிபாடுகளை குடும்பத்தோடு சென்று மேற்கொள்வீர்கள்.

### சிவல்புரி சிங்காரம்

இம்மாதம் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்க நந்தீஸ்வரரை பிரதோஷ நேரத்தில் வழிபட்டு வாருங்கள். பிரதோஷ வழிபாடு பிரச்சினைகளைத் தீர்க்கும்.

(தொடரும்)

> சிலர் சொல்வது உண்மையாக இருக்கலாம். எல்லோரும் சொல்வது உண்மையாக இருக்க வேண்டும்.
>
> – இந்தியா

வலம்புரி

## கவுண்டமணி கண்ட கனவாக இலங்கை அரசியல்...

நடிகர் கவுண்டமணி என்றால் அடுத்தது செந்தில் என்பது எவருக்கும் தெரிந்தவிடயம். இருவரும் சேர்ந்தே நகைச்சுவையாக நடிப்பதால் ஒருவரைஒருவர் பிரித்துப்பார்ப்பது ரசிகர்களால் இயலாத விடயம்.

இருவரும் இணைந்து நடித்தாலும், கவுண்டமணி அடிப்பதும் செந்தில் அடிவாங்குவதுமான நடிப்பே அனைத்துத் திரைப்படங்களிலும் காட்சியாகும்.

ஒரு முறையேனும் செந்தில், கவுண்ட மணிக்கு அடித்தால் என்ன என்று ரசிகர்கள் மட்டுமல்ல செந்திலின் பிள்ளைகளும் கேட்டதான செய்திகளும் உண்டு.

செந்தில் அடிக்க கவுண்டமணி அடிவாங்குவதை விரும்பாத இயக்குநர்கள் செந்தில் அடிவாங்காமலும் இருப்பதற்காக கவுண்டமணி கனவு காணும் காட்சி ஒன்றை உருவாக்கினார்கள். அதில் கனவில் வருபவர் செந்திலாக... செந்திலை கனவில் கண்டதும் கவுண்டமணி படாத பாடு. கைதிகளை சிறையிலிருந்து திறந்து விடுதல் முதல் துப்பாக்கியால் சுடுதல்வரை கனவில் நடந்தேறுகின்றன. இது நகைச்சுவைக்குரியதாயினும் அதற்குள் ஆழமான அர்த்தம் உண்டு.

அதாவது எத்தனையோ தேவைகள்–வேலைகள்–கடமைகள் இருக்கும் போது ஒரு வரை மட்டும் சதா கனவு கண்டு, உள்ளதையெல்லாம் இழந்துபோகும் பரிதாப நிலைக்குச் சிக்குப்படுபவர்களும் உண்டு.

இந்த நிலைமை இலங்கை அரசியலிலும் இருப்பதை கண்டு நெஞ்சம் வேகிறது.

போர் முடிந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. இருந்தும் தென்னிலங்கை அரசியல் வாதிகள் விடுதலைப் புலிகள் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஒருவர் செல்கிறார் விடுதலைப் புலிகளை அடியோடு அழித்துவிட்டோம் என்று.

இன்னொருவர் விடுதலைப் புலிகள் அமைப்பு தலை தூக்கவே முடியாது என்கிறார். மற்றொருவர் சர்வதேச ரீதியில் அழிப்போம் என்கிறார்.

இராணுவம் சொல்கிறது விடுதலைப் புலிகளால் இனிமேல் எந்த அச்சமும் இல்லையென்று.

அப்படியானால் அச்சப்படத் தேவையில்லாதது பற்றி அடிக்கடி–அதிகம் பேசுவது எதற்காக?

முகாம் மக்களை மீள் குடியமர்த்தல், மிதிவெடி அகற்றல், அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு என எத்தனையோ விவகாரங்கள் எம்மை சூழ்ந்திருக்கும் போது அதனைப் பற்றிப் பேசுவதை விடுத்து விடுதலைப் புலிகள் பற்றியே சதா பேசுவது கவுண்டமணி கண்ட கனவுக்கு ஒப்பானதல்லவா?

# வன்னி முகாம்களில் வாழும் தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க தயங்க மாட்டேன்

## மங்கள சமரவீர எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மிதிவெடிகளையும் முகாம்களில் எஞ்சியுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களையும் காரணம் காட்டி அரசாங்கம், வடக்கில் மீள்குடியேற்றத்தைத் தாமதப்படுத்தினால் பருவ மழையினாலும் தொற்று நோய்களினாலும் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் பேரழிவைச் சந்திக்கும் அவல நிலை ஏற்படும். எனவே, முகாம்களிலுள்ள மக்களை உடனடியாக மீள்குடியேற்ற வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவரும் எம்.பி.யுமான மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்தியா விரைவாக செயல்பட்டு முகாம்களில் சிறைப்படுத்தப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். வன்னி முகாமில் வாழும் அப்பாவி மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு சர்வதேசத்தின் எந்த ஒரு மூலைக்கு சென்றேனும் நீதியைப் பெற்றுக் கொடுக்க தயங்கமாட்டேன் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் விஷேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ராஜகிரியவில் அமைந்துள்ள கட்சியலுவலகத்தில் இடம் பெற்ற போதே மங்கள சமரவீர எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முகாம்களில் வாழும் அப்பாவி தமிழ் மக்களை விரைவாக மீள்குடியேற்றம் செய்யுமாறு அரசாங்கத்தை பலமுறை கோரியிருந்தோம். ஆனால், அரசாங்கம் மிதிவெடிகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து மக்களின் மீள்குடியேற்றத்தை தாமதப்படுத்தி வந்தது. பருவ மழையினால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாகவும் நாம் முன்னெச்சரிக்கை செய்திருந்தோம். செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் பெய்ய வேண்டிய பருவமழை தற்போது துரதிஷ்டவசமாக ஆகஸ்டிலேயே பெய்ய பெய்ய தொடங்கியுள்ளதால் முகாம்களுக்குள் மழைநீர் சென்று தற்போது அங்கு வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலை எதிர்வரும் நாட்களில் படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

ஏற்கனவே மலசல கூட பிரச்சினை உட்பட பல்வேறு சுகாதார பிரச்சினைகள் முகாம்களில் காணப்படுகின்ற நிலையில் பருவமழையினால் முகாம்களில் நீர் தேங்கி பல்வேறு தொற்று நோய்கள் பரவி மக்களை பேரழிவிற்குள் தள்ளிவிடும்.

முகாம்களில் மக்களுடன் உள்ள புலி உறுப்பினர்களுக்காக மொத்த மக்களையும் கம்பி வேலிக்குள் அடைத்து வைத்திருப்பது நியாயமில்லை.

1989 மற்றும் 90 களில் தென்பகுதி சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்ட இளைஞர்களை கைது செய்யாமல் தெற்கில் மொத்த மக்களையும் அப்போதைய அரசாங்கம் முகாம்களில் வைத்திருந்தால் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நானும் ஓரிரு ஆண்டுகள் முகாம்களில் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

சிங்கள மக்களுக்கு ஒன்று நடக்கும் போது அதனை எதிர்ப்பதும் தமிழர்களுக்கு ஒன்றென்றால் அதனை பராமுகமாய் இருப்பதும் நாகரீகமான விடயமல்ல. சிங்கள மக்களும் வன்னி முகாம்களின் உண்மையான நிலையினை அறிய வேண்டும். இதற்கு சிங்கள ஊடகங்கள் முகாம் செய்திகளை பிரசுரிக்க வேண்டும்.

எனவே முகாமில் வாழும் மக்களும் இலங்கையர்களே இவர்களின் பிரச்சினைகளை பேசுவது தேசத்துரோக செயல் அல்ல. முகாம்மக்களை பலவந்தமாக சிறைப்படுத்திய நிலையே தற்போது காணப்படுகின்றது. எனவே அரசாங்கம் காரணம் கூறாமல் முகாம்களை அவர்களது சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும். (ஓ-6)

## வவுனியா வைத்தியசாலையில் சோதனை கெடுபிடி அதிகரிப்பு

வவுனியா பொது வைத்தியசாலையில் அதிகரித்து வரும் சோதனைக் கெடுபிடிகளால் தமது உறவினர்களையும் நண்பர்களையும் பார்வையிட வரும் மக்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பொது வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடச் செல்பவர்கள் பொலிஸ் சோதனையின் பின்னர் இராணுவத்தினரிடம் அடையாள அட்டையை கொடுத்து விட்டுச் செல்ல வேண்டிய சூழல் உள்ளமையினால் பார்வையாளர்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு நோயாளர்களை பார்வையிட முடியாமல் போவதுடன் சிலரை பார்வையிடும் நேரம் முடிந்து விட்டதாகக் கூறி திரும்பிச் செல்ல வைத்திய சாலைப் பணியாளர்கள் கலைத்து விடும் நிலைமை காணப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் மீண்டும் அடையாள அட்டையைப் பெறுவதற்கு முன்னையதை விட மிக நீண்ட வரிசையில் பார்வையாளர்கள் காத்து நிற்கின்றனர்.

சாதாரணமாக ஒருவர் அடையாள அட்டையை ஒப்படைத்து மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு சுமார் 2 அரை மணி நேரத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது. இதேவேளை தற்போது மழைகாலம் ஆரம்பித்திருப்பதனால் மக்கள் நனைந்தவாறே வரிசையில் நிற்பதனால் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களும் நோயாளர்களாக வேண்டியேற்படுகின்றது. நலன்புரி நிலையத்தில் உள்ள மக்கள் இங்கு இராணுவப் பாதுகாப்புடன் சிகிச்சைக்கு கூட்டிவரப்பட்ட போதிலும் அவர்கள் தப்பிவிடாமல் இருக்கவே இவ்வாறான நடைமுறை கைக்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (ஓ-6)

## தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயக் கொடியேற்றம் இன்றாகும்

### முருகன் கொடி ஏறுது பார்

ஆறுதனில் நீரோடும் அலையோசை செவிவார்த்து
ஆனந்தம் கொள்வோனே உனது கொடி ஏறுதுபார்
பேறுதனை கண்டோம் புலத்தினிலோர் பெருமானே
பதிவிலக வைக்காதே உனது கொடி ஏறுதுபார்
சோறுதனை சோர்வின்றி சந்நிதியில் தருவாயே
சிவனுமை மைந்தனே உனது கொடி ஏறுதுபார்
தேறுகின்ற வழியில்லை தேடிவந்தோம் உனையே
துணையாய் நீயிருப்பாய் தூயவனே விடிவைத்தா


அல்வையூர் கே.ஆர். திருத்துவராஜா

### சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி முருகா கொடியேற்று

சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி முருகா கொடியேற்று
சண்முக சீலா சங்கரன் பாலா சக்தி
பரம் பொருளே கொடியேற்று
சந்ததம் கீதத் திருப்புகழ்பாடி சிந்தை
மகிழ்ந்திட கொடியேற்று
சரண மலரடி மறவா வரம்தரவே கொடியேற்று
சங்கரன் காதில் தத்துவ வசனம் கூறிய
வேலா கொடியேற்று
சாந்தியொடு சமாதானம் சர்வமெங்கும்
நிலவிடவே கொடியேற்று

க. லோகேஸ்வரன் - தொல்புரம்

# அடியாரின் விருப்பமே எனது விருப்பம் –பாபா



பொறியியல் நிபுணரான மனோகர் என்பவர் ஒருமுறை புட்டபர்த்தி வந்தார். சில மாதங்களுக்கு முன்னர் பகவான் அவருக்கு மோதிரம் ஒன்றை அருளியிருந்தார். அம் மோதிரத்தை பகவான் முன் நீட்டினார் மனோகர். அம் மோதிரத்திலிருந்த மஞ்சள் வண்ண இரத்தினத்தின் ஒரு முனை சிறிதளவு உடைந்திருந்தது. அதற்கு பாபா, ''மோதிரத்தை செப்பனிட்டு தரச் சொல்கிறாயா? ஓ, அதில் என் உருவம் இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய், இல்லையா,'' என்று கேட்டவாறே அம் மோதிரத்தைப் பெற்றுக் கொண்டார்.

மீண்டும் பகவான், ''நீ பொறியியல் கலைஞன். உன் கைகள் எப்போதும் இயந்திரங்களை இயக்கிக் கொண்டிருக்கும் என் உருவம் இவ் மோதிரத்தில் இருக்குமானால் அதில் கீறல்கள் விழ நேரிடும். அப்போது உனக்கு நிம்மதி இருக்காது. நீ மேல் படிப்பிற்காக வெளிநாடு செல்லும் போது மோதிரத்தில் என் உருவத்தைப் பதித்துத் தருகிறேன்'' என்று கூறியவாறே மோதிரத்தை ஆள்காட்டி விரலாலும், பெருவிரலாலும் அனைவரும் பார்க்கும் படியாக உயர்த்திப் பிடித்துக் கொண்டு அதன் மேல் சற்றுப் பலமாக ஊதினார். நீ மிகவும் பாக்கியம் செய்தவன். இப்போது முன்னரைக் காட்டிலும் அதிக தங்கம் கிடைத்துள்ளது என்றார்.

பகவான் சொன்னதற்கேற்றாற் போல பழைய மோதிரம் மறைந்து விட்டது. அதற்குப் பதிலாக மெருகு துலங்கும் ஒளி பொருந்திய தங்க மோதிரம் ஒன்று பாபாவின் கைகளில் மின்னியது. அதில் கற்கள் காணப்படவில்லை. திறமைமிக்க சிற்பியால் செதுக்கினாற் போல அதில் 'எம்' எனும் ஆங்கில எழுத்து பொறிக்கப்பட்டிருந்தது. அதனை மனோகரின் விரல்களில் போட்டு விட்டுக் கொண்டே இது மொரார்ஜியின் பொன் அல்ல என்றார் பாபா.

மொரார்ஸி தேசாய் என்பவர் இந்தியாவின் நிதியமைச்சராக இருந்தவர். அவர் பொன்னணிகள் அனைத்தும் 14 கரட் பொன்னுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் பாபா படைத்த மோதிரம் 22 கரட் தங்கம் உடையது. அடியவர் விருப்பம் தானே பாபாவின் விருப்பம்.

ஜெய்சாயிராம் யாதவன்

# பிரித்தானியாவில் தாயாரை காணாமல் இரு இலங்கை பெண் பிள்ளைகள் பரிதவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் இரண்டு பெண் பிள்ளைகளுடன் இலங்கைத் தாயார் ஒருவரை நாடு கடத்தப் போவதாகத் அறிவிக்கப்பட்டதையடுத்து பிரஸ்தாப தாயார் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் ஹாட்டில்பூல் என்ற இடத்தில் வசித்து வந்த இக்குடும்பத்தில் பெண் பிள்ளைகள் இருவரும் சம்பவதினம் தேவாலயத்திற்குச் சென்று வழிபட்டுவிட்டுவீடு திரும்பிய போது அவர்களது தாயாரான 40 வயதான திருமதி ஜயந்தி ஜோசப்பை வீட்டில் காணாமல் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் இப் பிள்ளைகளின் தகப்பனார் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டதை அடுத்து பீதியடைந்த 16 வயதான ஜீவிதாவும் 15 வயதான நீரலாவும் தாயாருடன் இவ்வருட ஆரம்பத்தில் பிரிட்டனில் தஞ்சம் புகுந்தனர். திருமதி ஜயந்தி ஜோசப்பைக் கண்டுபிடிப்பதற் காக ஹாட்டில்பூல் பொலிஸாரும் கரையோரக் காவல் படையினரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை.

இந்தப் பெண் என்ன ஆனார் என்பது குறித்து பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது என்று ஹாட்டில் பூல் பொலிஸ் இன்ஸ்பெக்டர் லீருக்கின் தெரிவித்தார். நாடு கடத்தல் அறிவித்தல் உட்பட குடிவரவு பிரச்சினைகளுக்கு உள்ளான நிலையில் இப் பெண் காணாமல் போனமை அவரது குடும்பத்தினரையும் பொலிஸாரையும் கவலைக்குள்ளாக்கி உள்ளது. பிள்ளைகள் இருவரும் தற்போது குடும்ப நண்பர் ஒருவரின் பராமரிப்பில் உள்ளனர். சொந்த நாடான இலங்கையில் கடும் சண்டை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அங்கிருந்து தப்பி வெளியேறிய இக்குடும்பத்தினர் பிரிட்டனுக்குச் சென்று கடந்த கோடைக்கால பருவத்திலிருந்து ஹாட்டில்பூலில் வசித்து வருகின்றார்கள். பிள்ளைகளின் தகப்பனார் லீனஸ் ஜோசப் வீட்டிற்கு வெளியே உணவு வாங்கச் சென்ற போது இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டார்.மாமனாரும் யுத்தத்தின் போது கொல்லப்பட்டார்.

பிள்ளைகள் இருவரினதும் 17 வயதான சகோதரன் நலீஸனஸும் அங்கிருந்து தப்பி வெளிநாட்டுக்குச் செல்ல முயற்சி செய்து கொண்டிருந்தார்.

ஆனால் அவர் என்ன ஆனார் என்பது பற்றித் தெரியவில்லை. இக் குடும்பத்தினர் சமர்ப்பித்த புகலிடகோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து எந்நேரமும் தாங்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்துடன் வாழ்ந்து வந்த நிலையில் தற்போது தாயாரும் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# பிரித்தானிய அரசு இலங்கைக்கான ஆயுத ஏற்றுமதியை மீள்பரிசீலனை செய்யவேண்டும்

## பிரித்தானிய அனைத்துக்கட்சிக்குழு வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவதை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என பிரித்தானிய நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சி குழு வலியுறுத்தியுள்ளது .அதேநேரம் பிரித்தானியா வழங்கிய ஆயுதங்கள் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பது குறித்து அமைச்சர்கள் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் பலவகையான போர் ஆயுதங்களையும் உபகரணங்களையும் பிரித்தானியா இலங்கை ஏற்றுமதி செய்திருந்தது.

எனினும் இந்த ஆயுதங்கள் பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஓ-6)

# வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த நீதிவான்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பிரதம நீதி அரசர் கோரிக்கை

(கொழும்பு)

வழக்கு விசாரணைகள் துரிதப்படுதப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் அசோக டிசில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் வழக்கு விசாரணைகளுக்காக அதிக காலம் எடுத்துக்கொள்ளப்படுவதாகவும், வழக்கு விசாரணைகள் தாமதப்படுத்தப்பட்டால் மக்களே [illegible] பிரச்சினைகளுக்கு தீர்வினை தேடிக்கொள்வர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.சில வழக்கு விசாரணைகள் [illegible] முதல் 35 ஆண்டுகள் வரையில் நீடிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சில நீதிமன்றங்களது நீதவான்கள் 10 மணிக்கு வந்து 12 மணிக்கு சென்றுவிடுவதாகவும், இவ்வாறான நடவடிக்கைகளே வழக்கு விசாரணைகள் தாமதமாவதற்குக் காரணம் எனவும் அவர்தெரிவித்துள்ளார்.எனவே, வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவை யினை வழங்க நீதிவான்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்ல அனுமதியளிக்க வேண்டும்

## புதிய சிஹல உறுமய

(கொழும்பு)


இடியமீன் மற்றும் பொல்போட் போன்ற சர்வாதிகார ஆட்சியாளர்கள் காலத்தில் கூட இவ்வாறான இடம்பெயர் முகாம்கள் காணப்பட்டதா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாக புதிய சிஹல உறுமய கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.இடம்பெயர்ந்த மக்கள் தங்களுக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்ல அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக விடுதலைப்புலிகளின் அடக்குமுறைகளை அனுபவித்து வந்த பொதுமக்கள் தற்போது அரசாங்கத்தின் அடக்குமுறைகளினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் மனமேந்திர இதனைத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் பலர் தினம் தோறும் உயிரிழப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று தீர்த்தத் திருவிழா



## அவனி மக்கள் விடிவுக்காய் போராடினாய்

நல்லை முருகையா நலிவுற்றோர்
நலமொன்றே இதயத்து இலட்சியமாய்
உள்ள(ம்) முருகையா உலகத்தோர்
ஈடேற்றமே உள்ளச் சிந்தனையாம்
வல்ல முருகையா அவனி மக்கள்
விடிவுக்காய் போராடினாய்
வெள்ளப் பிரவாக கவிதைத் தீர்த்தம்
வற்றாது நிதம் பசுமை நினைவாய் நிலவும்

*க. சிங்காரவேல், கரவெட்டி*

## வடிவேலன் சேவடி துதிப்போம் வாரீர்

திருக்கயிலை உறை சிவசக்தி இளங்குமரன்
முருகவேளிற்கு இன்று தீர்த்தோற்சவம்
பூண்நூலும் – உருத்திராக்கமும் மார்பில்
தவழ்ந்தாட, மரகதம்,வைர,வைடூரியம்
பொன்னாரம் –செண்பகப் பூமாலை ஜொலி
ஜொலிக்க– தேவியார் துணை கொண்டு வரும்
வடிவேலனுக்கு இன்று தீர்த்தோற்சவம்
மன்னுயிர்கள் மகிழ்வுறவே –விண்ணுறைவோர்
வாழ்த்தி நிற்க எங்கள் அப்பனுக்கின்று தீர்த்தோற்சவம்
கண் பெற்ற பேறுதனை காண்போம் வாரீர்
புண்பட்டு மனம் நொந்த துயர்தீர
பண்பட்டு அவன் திருப்பாதம் சேர்வோம்
கண்பட்டு விடாது அவன் சேவடி துதிப்போம் வாரீர் வாரீர்

*எஸ். பொன்.சண்முகநாதன், யாழ்ப்பாணம்*

## தீர்த்தமும் ஆடினர் தான்

பாடிய பாடகர் பாடலின் பாங்கதைப்
பார்த்து ரசிப்பதுவாய்
நாடிய நல்லருள் நல்கிட நண்ணியே
நல்லையூர் எல்லையின்மேல்
ஆடிய காவடி கூடிய பாடகர்
அல்லல்கள் தொல்லைகள் போய்
தேடிய கந்தனும் வந்தனர் இந்தநாள்
தீர்த்தம் ஆடினர்தான்

*மு.பாலசுப்பிரமணியம், மந்துவில்*

## பவனி வாராய் யுகவரதா ...!


நல்லை நகர் பதிவாழும் கந்த வேலா
நாடி நின்று நயம் பெறவே வரமருள்வாய்
தொல்லை இன்றி பூவுலகில் நாம் வாழ
தோத்தரித்து தெண்டனிட கரம் தருவாய்
எல்லை இல்லா மங்கலத்தை எமக்கருள
ஏறுமயில் ஏறி நீயும் கண்பாராய்
பல்கலைகள் பயிலவைக்கும் யுகவரதா
ஏற்று புகழ் தேற்றிவிட பவனி வாராய் !

*சங்கையூர், பொன்.சுபா*



தந்தைக்கு உபதேசம் செய்த பாலகனே !
உன் திருமுகம் காட்டி அருளினை தந்துவிடு!
கஜன் குறூப்
அபிவிருத்தி லொத்தர் சபை முகவர்
பத்திரிகை முகவர்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

# சதமடித்தனர் மஹேல, சமரவீர; இலங்கை அணி வலுவான நிலையில்



(காலி)

திலான் சமரவீர-மஹேல ஜெயவர்த்தன சிறப்பாக விளாச இலங்கை அணி முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 452 ஓட்டங்களை பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி ; 2 டெஸ்ட், 2 இருபது-20 போட்டிகள் மற்றும் முக்கோண ஒருநாள் தொடரிலும் பங்கேற்கிறது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் விக்டோரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் பரணவிதான பூச்சியத்துடனும் அணித் தலைவர் சங்கக்கார 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையிழந்து தடுமாறியது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த டில்சான்-மஹேல ஜெயவர்த்தனா ஜோடி அதிரடியான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தது. இந்த ஜோடி 24.1 ஓவர்களில் 118 ஓட்டங் களை இணைப்பாட்டமாக குவித்த நிலையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்சான் 72 பந்துகளில் (12 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட)92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய திலான் சமரவீர நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மஹேல ஜெயவர்த்தன தனது 26 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்ய இலங்கை அணி 250 ஓட்டங்களை பூர்த்தி செய்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிபில் இலங்கை அணி 3 விக்கெட்டுகளையிழந்து 293 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மஹேல ஜெயவர்த்தன 108 ஓட்டங்களையும் திலான் சமரவீர 82 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 300 ஓட்டங்களை எடுத்தபோது மஹேல ஜெயவர்த்தனா 227 பந்துகளில் (15 பவுண்டரிகள் உட்பட) 114 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து மத்யூஸ் களமிறங்க மறு முனையில் திலான் சமரவீர 223 ஆவது பந்து வீச்சில் தனது 10 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய மத்யூஸ் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிரசன்ன ஜெயவர்த்தன 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 106.4 ஓவர்களில் 408 ஓட்டங்களை எடுத்த போது 6 ஆவது விக்கெட்டையிழந்தது. அடுத்து களமிறங்கிய குலசேகர நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறு முனையில் திலான் சமரவீர 150 ஓட்டங்களைக் கடந்து அசத்தினார்.

எனினும் திலான் சமரவீர 277 பந்துகளில் (24 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 159 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 117.4 ஓவர்களில் 452 ஓட்டங் களை எடுத்து சகல விக்கெட்டுக் களையிழந்தது.

இதில் குலசேகர 18 ஓட்டங்களையும் முரளிதரன் 8 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் மார்டீன், அணித்தலைவர் டானியல் விக்டோரி ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் ஓ பிறின் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 2 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் மக்கின்றோஸ் 36 ஓட்டங்களையும் பட்டேல் ஆறு ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் குப்தில் 24 ஓட்டங்களுடனும் பிறைன் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் திலான் துஷார, அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



## ஒரு நாள் தொடர் பங்களாதேஷ் வசம்

(புலவாயோ)

ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் சிம்பாவேயை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பங்களாதேஷ் அணி. இதன் மூலம் ஒரு நாள் தொடரை 4:1 என வென்றது.

சிம்பாவே, பங்களாதேஷ் அணிகள் மோதிய 5 ஆவது ஒரு நாள் போட்டி புலவாயோவில் நடந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 46.4 ஓவர்களில் 209 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் ரெயிலர் 61, பிறைஸ் 46 ஓட்டங்களை எடுத்து ஓரளவு கைகொடுத்தனர்.

எளிய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு முஜிபுர் ரஹ்மான் உதவினார். 47.5 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 212 ஓட்டங்களை எடுத்து பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது.

முஜிபுர் ரஹ்மான் 98 ஓட்டங்களை எடுத்தார். இதன் மூலம் பங்களாதேஷ் அணி ஒரு நாள் தொடரை 4:1 என கைப்பற்றி கோப்பையை வென்றது.

## உலக சம்பியன்ஷிப்பில் இசின்பெயவா ஏமாற்றம்


(பேர்லின்)

பேர்லினில் நடக்கும் உலக சாம்பியன்ஷிப் தடகளப் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தல் பிரிவில் ரஷ்ய வீராங்கனை, இசின்பெயவா அதிர்ச்சி தோல்வியடைந்தார். கோலூன்றிப் பாய்தல் பிரிவில் இரண்டு முறை ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர் ரஷ்ய வீராங்கனை இசின்பெயவா. தவிர, தற்போதைய உலக சம்பியனாக இருப்பவரும் இவர் தான்.

சமீபத்தில் நடந்த லண்டன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் தங்கம் வெல்ல முடியாமல் தோல்வியடைந்தார். இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை பேர்லினில் நடந்த உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டியிலும் தோல்வியடைந்தார். இதில் போலந்தின் அனா ரோகவுஸ்கா தங்கம் வென்றார். வெள்ளி மற்றும் வெண்கல பதக்கத்தை முறையே அமெரிக்கா மற்றும் போலந்து வீராங்கனைகள் வென்றனர்.

இசின்பெயவா எந்த பதக்கமும் பெறமுடியவில்லை. இதுகுறித்து அவர் கூறுகையில்;

பயிற்சியில் நான் 4.70மீ தாண்டி இருந்தேன். இதனால் நம்பிக்கையுடன் இருந்தேன். எல்லாமே சரியாக இருந்தது. ஆனால் போட்டியில் என்ன நடந்தது என சரியாக தெரியவில்லை. விரைவில்இந்த தோல்வியில் இருந்து மீண்டு வருவேன் என்றார்.



கோலூன்றிப் பாய்தலில் தங்கம் வென்ற போலந்து வீராங்கனை அனா ரோகவுஸ்கா

## சம்பியன்ஸ் லீக் இருபது-20; புதிய விதி அறிமுகம்

(மும்பை)

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் ஒரே வீரர் இரண்டு அணிகளில் இடம்பெற்றிருப்பது தொடர்பாக முக்கிய முடிபு எடுக்கப்பட்டு உள்ளது.

இந்தியாவில் எதிர்வரும் ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது. உள்நாட்டு கிரிக்கெட் தொடர்களில் சம்பியனான உலகின் பல்வேறு அணிகள் இத் தொடரில் கலந்து கொள்கின்றன. மொத்தம் 12 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

இந்தியா தரப்பில் ஐ.பி.எல். தொடரில் சம்பியனான டெக்கான் சார்ஜர்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் மற்றும் டில்லி டேர் டேவில்ஸ் ஆகிய மூன்று அணிகள் விளையாட உள்ளன.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து தரப்பில் தலா இரண்டு அணிகளும் நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், இலங்கை தரப்பில் தலா ஒரு அணிகளும் தொடரில் பங்கேற்க உள்ளன.

இத் தொடரில் பங்கேற்கும் அணிகளில் இடம்பெற்றுள்ள ஒருசில வீரர்கள் இரண்டு அணிகளில் இடம்பெற்றுள்ளனர். அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர்(நியூசவுத் வேல்ஸ், டில்லி டேர்டேவில்ஸ்) ஆகிய இரு அணிகளிலும் இடம்பெற்றுள்ளார்.

இதுபோல நாதன் பிராக்கன்(நியூசவுத் வேல்ஸ், றோயல் சலஞ்சர்ஸ்), மெக்கலம்(ஓடாகோ போல்ட்ஸ், நியூசவுத் வேல்ஸ்), டிர்க் நான்ஸ் (விக்டோரியா, டில்லி டேர் டேவில்ஸ்), கமரூன் ஒயிட்(விக்டோரியா, றோயல் சலஞ்சர்ஸ்), ஆன்ட்ரூ மெக்டொனால்டு(விக்டோரியா, டில்லி டேர் டேவில்ஸ்), கிப்ஸ்(கேப்கோப்ராஸ், டெக்கான் சார்ஜர்ஸ்), மகரூப்(வேயம்பா, டில்லி டேர் டேவில்ஸ்), டுவைன் சிமித்(டெக்கான் சார்ஜர்ஸ், சக்சஸ்) ஆகிய வீரர்கள் இரண்டு அணிகளில் இடம்பெற்றுள்ளனர்.

இதன்காரணமாக அவர்கள் சம்பியன்ஸ் லீக் தொடரில் எந்த அணியில் விளையாடுவார்கள் என்ற குளறுபடி ஏற்பட்டது. தற்போது இந்தப்பிரச்சினையைத் தீர்க்க புதிய விதியை அறிமுகப்படுத்தியுள்ளது சம்பியன்ஸ் லீக் நிர்வாகம்.

இதன்படி குறிப்பிட்ட ஒரு வீரரை தங்கள் அணியிலேயே வைத்துக்கொள்ள விரும்பும் ஒரு அணி; அவர் சார்ந்த மற்றொரு அணிக்கு ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும்.

உதாரணமாக டில்லி டேர்டேவில்ஸ் அணியின் டேவிட் வோர்னர் தங்கள் அணிக்காக சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாட வேண்டும் என்று விரும்பும் பட்சத்தில், அவர் இடம் பெற்றுள்ள மற்றொரு அணியான நியூ சவுத் வேல்ஸ் அணிக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் பங்கேற்கவுள்ள 12 அணிகள்;

ஐதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ்(இந்தியா), பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் (இந்தியா), டில்லி டேர்டேவில்ஸ் (இந்தியா), நியூசவுத் வேல்ஸ் புளூ(ஆஸி.), விக்டோரியா பஸ்ரேஞ்சர்ஸ்(ஆஸி.), கேப் கோப்ராஸ்(தெ.ஆ.), டைமன்ட் ஈகல்ஸ்(தெ.ஆ), ஒடாகோ போல்ட்ஸ் (நியூசி.), டிரினிடாட் அன்டு டுபாகோ(மே.தீவு.), வேயம்பா(இல.), சக்சஸ் சார்க்ஸ்(இங்.) மற்றும் சோமர்செட் சாப்பிராஸ்(இங்.).

கொடிய வினை தீர்த்திடும் முருகா
எம்குற்றங்கள் போக்கிடுவாய்
வறிய மக்கள் வாடி வதங்கிடாமல்
வரம் தருவாய்.
ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் பெற்றிட நாடுங்கள்.
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.
(C-2928)

# இலங்கை விவகாரத்தில் பான் கீ மூன் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை!

கலியுக வரதா
எம் கர்மவினை தீர்த்து
எம்மை நல்வழிப்படுத்திடுவாய்
நல்லையம்பதி முருகா
அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.
(C-2928)

## நோர்வே குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான்கீ மூன் தமது கடமையை சரியான முறையில் மேற்கொள்ளவில்லை என ஐக்கிய நாடுகளுக்கான நோர்வே பிரதிநிதி முனா ஜுல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கியநாடுகள் அமைப்பின் தலைமைப் பதவியை வகித்துவரும் பான்கீமூன் தனது கடமைகளை மேற்கொள்ளவில்லை. இலங்கை விவகாரத்தில் ஐ.நா செயலாளர் சரியான முறையில் செயற்பட்டிருந்தால் பெரும் அழிவுகள் ஏற்பட்டதை தடுத்திருக்கலாம். இது விடயத்தில் அவர் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை எனவும், சிறந்த தலைமைத்துவப் பண்புகளும் அவரிடம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகப் பிரச்சினைகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு காத்திரமான தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதென குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## அகதி முகாம்களிலுள்ள...

வவுனியா அகதி முகாம்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழு பிரதித் தலைவருமான மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் யூதர்களை கொலை செய்வதற்காக அடைத்து வைத்திருந்ததைப் போன்று தற்போது தமிழ் மக்கள் முகாம்களுக்குள் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இதனைப் பார்க்கும் போது ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சியாகவே காணமுடிகின்றதுஎன்றும் அக்கட்சிசுட்டிக்காட்டியது.

இந்தியாவுக்கு என்ன பதில் சொன்னீர்கள் என்ன உத்தரவாதம் அளித்தீர்கள். 180 நாட்களுக்குள் இந்த மக்களை முகாம்களை மூடிவிட்டு இந்த அகதி மக்களை மீளக் குடியமர்த்துவதாக ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் இன்றைக்கு 3 மாதங்கள் முடிந்துவிட்டது. அடுத்த மூன்று மாதத்திற்குள் இந்த மக்கள் மிக அபாயகரமான நிலைமையை எதிர்நோக்கி நிற்கிறார்கள்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரியா, செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள பருவப் பெயர்ச்சி மழையின்போது நிவாரணக் கிராமங்களில் பிரச்சினைகள் மேலும் மோச மடையலாம் எனத் தெரிவித்தார்.

நிவாரணக் கிராமங்களில் வாழும் மக்களை விரைவில் மீளக் குடியேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய கூடாரங்களில் வாழும் இந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்வதாகவும் சுட்டிக்காட்டினார். இதன்போது குறுக்கிட்ட சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா நிவாரணக் கிராமங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்தார். இந்த மக்கள் சுகாதாரப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை அமைச்சர் நிராகரித்தார். (ச-3,5)

## குமரன் பத்மநாதனுக்கு எதிராக...

பயங்கரவாதச் செயல்களில் தமக்குத் தொடர்பிருப்பதை குமரன் பத்மநாதன் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் சமாதானதிட்டங்களை முன்னெடுப்பதற்காக நோர்வேயின் நோராட் அமைப்பு பத்துக் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை இங்குள்ள 500 அமைப்புகளுக்கு வழங்கியதாக கே.பி. தெரிவித்திருப்பதாக மற்றுமொரு இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவிகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்திருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

வீடுதலைப் புலிகள் சமாதானம் தொடர்பில் அர்ப்பணிப்புடன் இருந்ததாகவும், நாடு முழுவதும் பிரசாரம் செய்யும் பணிகள் இந்த அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற போரை நிறுத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்பட்டமை குறித்து புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளதாகவும் சிங்கள நாளிதழ் ஒன்று கூறியுள்ளதாக அந்த இணையத்தள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## பத்மநாதன் இந்தியா...

ஆண்டு ஸ்ரீ பெரம்புத்தூரில், இந்திய பிர தமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமைக்கு ஆதரவு வழங்கியமை தொடர்பான குற்றச்சாட்டு பத்மநாதன் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அவர் தமிழகத்திற்கு பலமுறை விஜயம் செய்து,தமிழீழ விடுதலை புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்திய உள்துறை அமைச்சர் ஜி.கே.பிள்ளையிடம் வினவிய போது பத்மநாதன் தற்போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் எங்கும் தப்பிப் போவதில்லை எனவே அவர்மீது உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை புலிகள் இந்தியாவில் தடை செய்யப்பட்டிருந்த பொழுதிலும் இந்தியாவிற்கு அச்சுறுத்தலாகவே அவர்கள் இருந்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் பத்மநாதன் ராஜீவ்காந்தியின் கொலையாளியான தாணுவிற்கு ஆர்.டீ.எக்ஸ் மற்றும் சி4 வெடிமருந்துகளையும், சிவராசனுக்கு ஏ.கே 47 கைத்துப்பாக்கியையும் செக் தயாரிப்பான 9 மில்லிமீட்டர் கைத்துப்பாக்கியையும் வழங்கினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## ரஜனி, வைகோ...

தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளில் இயங்கி வரும் தமிழ் வானொலிச் சேவைகள், தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் வியாபார முயற்சிகளுக்கு புலிகள் பணத்தை முதலீடு செய்துள்ளனர்.

குறித்த ஊடகங்கள் வெறுமனே இலங்கை அரசாங்கம் மீது போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதனை விடுத்து, தமிழ் புலம்பெயர் மக்களின் பணம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதனை விளக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான தமிழ் இணையதளங்கள் புலம்பெயர் தமிழர்களின் பணத்தைக் கொண்டு இயங்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொல் திரு மாவளவன், வைகோ, ராம்தாஸ் மற்றும் நெடுமாறன் போன்ற தமிழக அரசியல் தலைவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்பம் முதலே நிதியுதவிகளை வழங்கி வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில தமிழ்த் திரைப்படங்களை இயக்குவதற்காக புலிகள்பணம்வழங்கியுள்ளதாக அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

லண்டனில் உள்ளதமிழர்கள் பெரும் தொகையான பணத்தை செலவிட்டு தமிழகத்தில் திரைப்படங்களைதயாரித் துள்ளதாகவும், ரஜனிகாந்திற்கும் இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். புலம்பெயர் தமிழர்களினால் பயன்படுத்தப் படும் இரத்தம் படிந்த பணத்தைஇலங்கைக்கு கொண்டுவரநடவடிக்கை எடுக்கப்படவேண்டும்எனஅவர்தெரிவித்தார். (ச-5)

## நல்லூர்க்...

தட்சணங்கள், காவடிகள், கற்பூரச் சட்டிகள் என பக்தர்கள் பலர் தமது நேர்த்திக் கடன்களை நிறை வேற்றி னர்.

யாழ் குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும், கொழும்பு மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் நல்லூர்க் கந்தனின் தேர்த்திரு விழாவுக்கு பெருமளவானோர் படை யெடுத்தனர். முருகப் பெருமான் தேரில் வலம் வந்த போது பாதுகாப்புப் படையினரின் ஹெலிகொப்டர் ஒன்று வானில் வட்டமிட்டு மலர் தூவியது.

காலை 9.15 மணியளவில் தேர் இருப்பிடம் வந்தது.அதனைத் தொடர்ந்து பச்சை சார்த்தி பூசை இடம்பெற்றது.

இதேவேளை நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவை முன்னிட்டு 21 ஆம் திகதி வரையும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-7)

## 5 தாலிக் கொடிகள்...

கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இச் சனநெரிசலை பயன்படு த்தி பெண்களிடம் இக் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் 5 பெண்களிடம் தாலிக் கொடிகளும் 7 பெண்களிடம் தங்கச் சங்கிலிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதைவிட கைச்சங்கிலி ,20 ஆயிரம் ரூபாய் என்பனவும் கொள்ளை அடிக்கப் பட்டுள்ளதாக நேற்று மாலை வரையில் முறையிடப்பட்டுள்ளது.

இக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (ச-5,7)

## பாற்சோறு உண்ட தெற்கு...

மாநாட்டை கொழும்பில் நடத்தியது.

இதன் போது, கருத்துரைத்த காணாமல் போனோரை கண்டுபிடிக்கும் குழுவின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜனகன், வன்னி யுத்தத்துக்கு முன்னர் தமக்கு 184 காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பாக முறைபாடு செய்யப்பட்டிருந்ததாக தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர், 93 முறைபாடுகள் கிடைத்திருப்பதாக தெரிவித்தார். செல்வீச்சு ஒன்றுக்கு பலியான தமது தாயை புதைத்துவிட்டு, திரும்பிக் கொண்டிருந்த ஒரு வயது குழந்தையுடன் ஏழு பேர் படையினரால் பஸ் ஒன்றில் ஏற்றப்பட்ட பின்னர், காணாமல் போயுள்ளார்கள். மருத்துவமனைகளில் இருந்து பலர் காணாமல் போயுள்ளார்கள்.

எனவே இந்த வஞ்சக நடவடிக்கைக்கு எதிராக அரசியல் காரணங்களுக்கு அப்பாற்பட்டு, தாம் போராடப்போவதாக ஜனகன் குறிப்பிட்டார்.

யுத்த வெற்றி என காட்டப்பட்டு, எந்த தென்னிலங்கை மக்களுக்கு பாற்சோறு கொடுக்கப்பட்டதோ, அதே தென்னிலங்கை மக்கள் வன்னி மக்கள் படும் அவலத்தை கண்டு, இந்த அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் அளவிற்கு தமது போராட்டம் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை கூட, சென்று பார்வையிட முடியும், எனினும் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை, முட்கம்பிகளுக்கு அப்பால் சென்று பார்க்கமுடியாது.

மீள் குடியேற்றத்துக்காக கண்ணி வெடிகள் அகற்றப்பட வேண்டும் என சொல்லப்படுகின்ற போதும், யாழ்ப்பாணத்தில் இருந்து சொந்த தேவைகள் காரணமாக வன்னிக்கு வந்த போது, யுத்தத்தில் சிக்கியவர்களை கூட, ஏன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதில் அரசாங்கம் பின்னிற்கிறது?

முகாமில் உள்ளவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்போது, அவர்களின் சொந்த இடங்களுக்கு பதிலாக முகாம்களின் முகவரிகளே குறிப்பிடப்படுவதற்கான காரணம்என்னஎனஅவர் கேள்வி எழுப்பினார்.

எனவேமீள் குடியமர்த்தல் தாமதப்படுவதற்கு அரசாங் கத்தின் வஞ்சம் தீர்க்கும் படலமே முன்னிலை வகிப்பதாகஅவர்குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இது தமிழினத்தை பூண்டோடு அழிக்கும் ஒரு நடவடிக்கை என்றும் அவர் தெரிவித்தார். (ச-5)




நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு!!!
19.08.2009/20.08.2009/21.08.2009

MP3 PLAYER
Orange 2 GB 2500/- 2200/-
2 GB (Display) 3750/- 2750/-

MP5 PLAYER
Orange 2 GB (Camera) 6000/- 5500/-
Sony 2 GB 4900/- 4000/-

UPS
Techcom 650 W 4000/- 3800/-
Intex 600 W 4400/- 4000/-
DCP 650 W 4200/- 3900/-
Power 3III 4200/- 3900/-
PowerTree 650 W 4750/- 4500/-

SCANNER
Musteck 1248 5500/- 5250/-
HP 2410 7900/- 7500/-
HP G3110 14500/- 14000/- (Negative)

COMPUTER TABLE
3000/- 2800/-
3500/- 3200/-
3750/- 3500/-

NETWORK
DLink Broadband Router (4 Port) 5700/- 5000/-
DLink Bradband Router (4 Port) Wireless 6900/- 6250/-
DLink Network Switch (8 Port) 3500/- 2500/-
DLink Network Switch (16 Port) 5500/- 4500/-

RAM
Kingston 1 GB (800) 1950/- 1700/-
Kingston 2 GB (800) 3550/- 3200/-

PRINTER
HP D1560 Colour 4550/- 4200/-
Canon IP1980 Colour 5550/- 5000/-
HP 1005 Laserjet 13950/- 13500/-
HP 4355 All in One 14750/- 14000/- (Printer, Scanner, Copier)

PROCESSOR
Intel 2.20 Ghz / 1M DualCore 8450/- 8000/-
Intel 2.50 Ghz / 2M DualCore 9250/- 8900/-
Intel 2.66 Ghz / 2 M DualCore 9550/- 9000/-
Intel 2.80 Ghz / 3M Core 2 Duo 15350/- 14750/-

PROLINK
Broadband 3.5 G USB HSDPA Modem (SIM) 10750/- 9900/-

MONITOR
CRT 17" 11000/- 10000/-
LCD 15" 10750/- 10250/-
LCD 19" 16500/- 15900/-

SUBWOOFER
Microlab 2.1 (M280) 3500/- 3000/-
Microlab 5.1 6000/- 5500/-
Creative 2.1 3000/- 2500/-
Creative 5.1 7500/- 6750/-

MOTHERBOARD
Asrock G31 5750/- 5300/-
Foxconn G31 5900/- 5500/-
Asus P5KPL-AM 6750/- 6400/-
Intel DG31 PR 7500/- 7200/-
Longtron 478 6500/- 5600/-
Biostar G31 5900/- 5200/-

TV CARD
Internal TV Card 3000/- 2400/-
CRT Combo TV Box 3900/- 2750/-
LCD Combo TV Box 5900/- 4900/-

POWER SUPPLY
400 W 1350/- 1100/-
500 W 1550/- 1250/-

CASING
ATX Casing 3000/- 2600/-

UPS BATTERY 12 V 1450/- 1200/-

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
* Stock Available * Warranty Value 1-3 years

## மரண அறிவித்தல்



### பொன்னம்பலம் சிவலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

குப்பிளானை பிறப்பிடமாகவும் துன்னாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (19.08.2009) புதன் கிழமை காலமானார்.

அன்னார் இராசமணி( ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வேதநாயகம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற Dr. மகாலிங்கம் அவர்களின் அன்பு சகோதரரும் திருமலர்தேவியின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (20.08.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிட்டிதூ மயானத்தில் தகனம் செய்யப்படும்.

'மணிமகால்'
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
இராசமணி
(மனைவி)

(3277)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.